JL
Rb5m211, N#VD
N26·16·5
186258

Regd: No. M. 916.

# THE VEDANTA DIPIKA

# வேதாந்த தீபிகை.

குரோதனஃஸ, 1925—1926. ஸம்புடம் 16.

மாசிமீ FEBRUARY. ஸஞ்சிகை 5.



பத்ராதிபர். } ச. ஸ்ரீநிவாஸராகவ
காரியதர்சி. } அய்யங்கார், எம்.ஏ.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - APR 1926
MADRAS

விஷய ஸூசிகை.

1. பத்ராதிபரின் குறிப்புகள். 77

2. ஸ்ரீபரமபத ஸோபாநம் (வ்யாக்யானத்துடன்):—
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம். சே. நரஸிம்மாசார்யர். 96

3. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை (தமிழ்மொழி பெயர்ப்புடன்)—
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். 193

Office:—2/11, Adiappa Mudaly Street, Purasawalkam.
K. R. Press, Madras.

வர்ஷச் சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 6



# வந்து விட்டது.

புதிய சரக்கு! புதிய கடியாரம்!!

# டிக்டாக் வால்கிளாக்

இப்பொழுதுதான் வந்தது

மிக்க அழகுள்ளது.

காலத்திற்கு சரியான மணியை

காட்டக்கூடியது.

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

சுவற்றில் மாட்டக்கூடியது.

விலை 1-க்கு ரூ. 3 தான்

தபால் செலவு வேறு.

---

# இனாம்! இனாம்!!





இச்சமயம் தவறாதீர்கள்!! சிலநாளைக்கு மாத்திரம்!!

உலகமெங்கும் ப்ரஸித்திபெற்ற தாராலீவர் ளோக்கட் லீவர் கடியாரம்விலை ரூ. 5-0-0 உள்ளது. உள்டையலின்மேல் ஐந்து வருஷம் உத்திரவாதம். காலத்திற்கு சரியானமணியை காட்டக்கூடியது. இக்கடியாரத்தை ஆர்டர் செய்கிறவர்களுக்கு ஒரு "C" டைம்பீஸ் இனாமாகக் கொடுக்கப்படும். இச்சமயம் தவறாதீர்கள். சிலநாளுக்குமாத்திரம். கடியாரம் ஒன்றுக்கு விலை ரூ. 5-0-0 முந்துங்கள்.

விலாசம்:— காப்டன் வாச் கம்பெனி,
தபால்பெட்டி 265, மதராஸ்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

9 APR 1926 MADRAS

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.
கார்யதர்சி }

ஸம்புடம் 16.] குரோதனஹூ, மாசிமீ. [ஸஞ்சிகை 5.

"த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே

வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥

[ஸ்ரீபாகவதம் - 1-9-23 ॥

## பத்ராதிபரின் குறிப்புகள்.

சிலகாலமாக நாம் இந்த தீபிகையை நமது ஸொந்தப்பத்திரிகை யைப்போல் பாவித்து நம்முடைய இஷ்டப்ரகாரமாக நடத்திவருகிறோ மென்றும், இது இந்த ஸபையின் பத்திரிகை என்பதை மறந்துவிட் டோமென்றும், சில பண்டிதர்களிடத்தில் மிகுந்த பக்ஷபாதமுடையவர் களாயிருக்கிறோமென்றும், இப்படிகளில் சிலர் பலவிதமாகப் பல இடங் களில் தோஷங்களை ஆரோபித்து ப்ரஸ்தாபித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டோம். அவற்றை நாம் ஒரு பொருட்டாகக் கருதா மல் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் நோக்கத்தை அநுஸரித்து ஷை ஸபையையும் தீபிகையையும் முன்னுக்குக்கொண்டுவரவேண்டுமென்கிற ஒரே எண்ணத்துடன் ப்ரயாஸம் எடுத்துக்கொண்டு நடத்திக்கொண்டுவருவது நிஷ்பக்ஷபாதிகளான தீபிகாபிமானிகளுக்குத் தெரிந்தவிஷயம்.

இப்படியிருக்க கொஞ்சகாலத்துக்குமுன் ஸ்ரீஅஹோபில மடத் தில் தீபிகைக்கு கார்யஸஹாயம் செய்யவேண்டுமென்று கேட்டதற்கு ஸ்ரீமடத்து ஆஸ்தான வித்வான் ஸ்ரீ. உப. வே. இஞ்ஜிமேடு ரங்கநாதா சார்யஸ்வாமி நம்மையும் நம் தீபிகையையும் தூஷித்து எழுதியிருக்கி றார். அதை ப்ரசுரப்படுத்தவேண்டாமென்று நாம் நினைத்தபோதிலும்



186758

அந்த ஸ்வாமி பலவிதமாய் நிர்பந்தப்படுத்துவதால் ப்ரசுரப்படுத்துவது அவச்யமாக இருக்கிறது. இப்படி நம்மிடத்தில் இல்லாத தோஷங்களை ஆரோபித்துக் குறைகூறுவதினால் அடியேனுடைய ப்ராரப்த கர்மங்களில் சில சிகையறுகின்றன என்று க்ருதஜ்ஞதையுடன் இருக்க ப்ராப்தமானாலும், தீபிகையினுடையவும் ஸபையினுடையவும் முன்னேற்றத்துக்கு அது பாதகமாயிருக்குமென்று யோசித்து அப்படிக் கூறப்படும் குறைகளுக்கு ஸமாதானம் எழுத முன்வரும்படி நேரிட்டிருக்கிறது.

ஸ்ரீ இஞ்ஜிமேடு ஸ்வாமியினுடைய ஒவ்வொரு தூஷணமும் அதனடியிலேயே அதற்கு ஸமாதானமும் படிக்கிறவர்களுடைய ஸௌகர்யத்துக்காக எழுதப்பட்டிருக்கின்றன.

"ஸுமார் இரண்டு மாதத்திற்குமுன் நம் பத்ராதிபர் கார்யதர்சி ஆர். ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார் ஸ்ரீஅழகியசிங்கர் ஸந்நிதிக்கு ஒரு விஜ்ஞாபன பத்ரிகையையும் அடியேனுக்கு ஒரு பத்ரிகையையும் எழுதி, அடியேன் விலாஸத்திற்கு அனுப்பி ஸ்ரீஸந்நிதியில் விஜ்ஞாபன பத்ரிகையை வாசித்துக் காண்பிக்கும்படி எழுதியிருந்தார். அடியேனும் ஸு ஸமயத்தில் விஜ்ஞாபித்தேன். ஸ்ரீ அழகியசிங்கரும் அதைத் திருச்செவி சாத்தி தத்காலமுள்ள சில அனுபபத்தியையும் இன்னும் சில விஷயங்களையும் அருளிச்செய்தார்."

ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்வாமி ஸாதித்தபடி தாத்காலிகமான நிரனுகூலங்களையும் சில அனுபபத்தியையும் நமக்கு எழுதியிருந்தால் ஸ்ரீ அழகியசிங்கர்ஸ்வாமி ஆஜ்ஞையை இப்போதுபோலும் அப்போதும் சிரஸாவஹித்து நாம் செய்த ப்ரேரணையையும், ப்ரார்த்தனையையும், தீபிகை மூலமாக மூன்றாவது ஸஞ்சிகையில் எழுதிய அம்சங்களை எழுதாமல் ஒழிந்திருப்போம். இந்த நிரூபத்திற்கும் அவச்யமிருந்திராது. இதுபோல் அப்போதே தெரிவிக்காமலிருந்தது நம்முடைய தௌர்பாக்யம்.

"அதைக்கேட்ட அடியேன் ஸ்ரீநிவாஸராகவ அய்யங்காருக்கு பதில் எழுதின கார்டில் ஸ்ரீஸந்நிதியில் ஸு ஸமயத்தில் விஜ்ஞாபித்தேன். சில அஸௌகர்யங்களால் அதில் உத்கடப்ரவர்த்தி இருப்பதாகத் தெரியவில்லை. அடியேனுக்கு உத்கடப்ரவ்ருத்தி இருந்து உபயோகமில்லை என்று எழுதியிருந்தேன். இது நன்றாக அடியேனுக்கு ஜ்ஞாபகமிருக்கிறது. பதங்கள் ஒருவேளை வேறுபட்டிருந்தாலும் அடியேன் சொல்லுகிற விஷயம்தான் அந்த கார்டிலுள்ளது. அதை வேதாந்ததீபிகையில் அச்சிட்டால் அதினர்த்தம் ப்ராமாணிகர்களான புத்திமான்களுக்கு விசதமாம். இதில் சில அஸௌகர்யங்களால் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ப்ரார்த்தித விஷயத்தில் உத்கடப்ரவ்ருத்தி இருப்பதாகத்தெரியவில்லை என்று அடியேன் எழுதியிருக்க கார்யதர்சிக்கு உத்கடப்ரவ்ருத்தி இருப்பதாகத் தெரியவில்லையென்று ஸ்ரீஅழகியசிங்கர் ஸாதித்ததாக கார்டிலிருப்பதாக எழுதியிருப்பது அந்[illegible]மூலமே. அப்படியானால் அடியேனுக்கு உத்கடப்ரவ்ருத்தியிருந்து உப



யோகமில்லை என்று எழுதியிருப்பது எப்படி பொருந்தும். இம்மேல் ஸந்தர்ப்பங்களை யொட்டி இதை ஸரிவர அர்த்தம் செய்துகொள்ளாத பத்ராதிபர் தீபிகை தமக்கு ஸ்வாதீனமாய் இருக்கிறதென்கிற எண்ணத்தால் தம்முடைய 'அந்யதாக்ரஹணத்தை யொட்டி ஸ்ரீ அழகியசிங்கரை கூடோக்தியினால் நிந்தித்திருப்பது அனுவச்ய வார்த்தை என்பது ப்ராமணிகர்களுக்கே விதிதமாம். இந்த பத்ராதிபர் சொல்வது ப்ராமணிகமாகில் மற்றொரு கார்யதர்சியாகிய ஸ்ரீ. உப. வே. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்காருக்கு அந்த கார்ட்டை காண்பித்து உள்ளபடி தீபிகையிலச்சிடுவாராக."

ஸ்ரீ உப. வே. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர் ஸ்வாமி நமக்கு இந்த வருஷம் ஐப்பசிமீ 2௳ எழுதியகார்டில் "** தேவரீர் நியமித்த ஸ்ரீமுகத்தை ஸ்ரீ ஸந்நிதியில் ஸுஸமயத்தில் விஜ்ஞாபித்தேன். திருவுள்ளத்தில் அதில் உத்கடப்ரவ்ருத்தி இருப்பதாய் தெரியவில்லை. அடியேனுடைய ப்ரயத்நம் உத்கடமாய் இருந்தும் லாபமில்லை. இதை தேவளிடத்தில் விஜ்ஞாபிக்கவும் லஜ்ஜிக்குறேன் ..........." என்று எழுதி இருந்தார். மேலே ஸாதித்தபிரகாரம் ஸ்ரீ உப. வே. இஞ்சிமேடு ஸ்வாமி அபிப்ராயப்பட்டிருப்பதை ஷை கார்டில் ஸ்ரீ ஸ்வாமி அதற்கு த்ரவ்யஸஹாயம் செய்ய திருவுள்ளம் பற்றவில்லை என்று வ்யக்தமாக எழுதி இருந்தால் அடியேன் ஸந்தேஹிக்க இடமிருந்திராது. "அதில் உத்கட ப்ரவ்ருத்தி இருப்பதாகத் தெரியவில்லை" என்ற வாக்யத்தை யோசித்தும் "அடியேனுடைய ப்ரயத்னம் உத்கடமாக இருந்தும் லாபமில்லை" என்றும் வாக்யத்தையும் யோசித்து, இதில் ஸ்ரீ இஞ்சிமேடு ஸ்வாமியை ப்ரவர்த்திக்கும்படி செய்தது அடியேனுடைய, ப்ரவ்ருத்தியாதலாலும், ஸ்ரீ ஸந்நிதியில் ப்ரார்த்தித்தது ஸ்ரீ இஞ்சிமேடு ஸ்வாமியினுடைய ப்ரவ்ருத்தியாதலாலும் ஆக இருவருடைய ப்ரவ்ருத்தியும் இந்த விஷயத்திலிருந்தபடியால் அவ்விருவர்களுக்குள் ஒருவருடைய ப்ரவ்ருத்தி ஸபலமாகவில்லை என்று சொன்னதைப் பார்த்து உத்கடப்ரவ்ருத்தி என்பது அடியேனைக் குறிக்கிறது என்று நினைத்து அது விஷயத்தில் நமக்கு உத்கடப்ரவ்ருத்தி இருக்கிறது என்பதை விஜ்ஞாபித்துக்கொண்டோம். இப்பொழுது கடிதத்திற்கு தம் அர்த்தத்தை ஸாதித்தபிறகு, உத்கடப்ரவ்ருத்தி அடியேனிடமில்லை என்று அடியேனுடைய அஜ்ஞானத்தால் க்ரஹித்தது தவறுதலாக இருந்தபோதிலும் நாம் எழுதியிருக்கும் வ்யாஸத்திலிருக்கும் வாக்யங்களை வாசிக்கும் தடஸ்தர்கள் நம்மை ஸ்ரீ ஸந்நிதியில் அபசாரப்பட்டதாக நினைக்க இடமில்லை என்று சொல்லுவார்கள் என்று நிச்சயமாய் நம்புகிறோம். தீபிகாபிமானிகளே! இன்னும் ஒருதரம் குரோதனஹூ மார்கழி மாஸத்திய ஸஞ்சிகையின் 46,47 வதுபக்கங்களை வாசித்து ஏதாவது ஒருவார்த்தையினால் அடியேனிடம் அபசாரமிருக்கிறது என்று ஏற்பட்டால் இந்த பத்ரிகையின் மூலமாக தெரிவிக்க ப்ரார்த்திக்கிறோம்.

"பத்ராதிபர் சொல்லுகிறபடி இந்த தீபிகையை ஸ்ரீ அழகியசிங்கர் ஆதரிக்கவேணுமோ என்பதை கொஞ்சம் பராமர்சிப்போம். இதின் மூலஸபையோ ஆதியில் அடியேனும் சித்தூர் ஸி. ராஜகோபாலாசார்யராலும் ஸ்ரீ பேரருளாளன் வைசாக உத்ஸவத்தில் வஸந்தோத்ஸவ மண்டபத்தில் உபக்ரமிக்கப்பட்டு, பின்பு திருவல்லிக்கேணியில் பலவிதமாய் அஹோபிலமடசிஷ்ய ஸபையாக சிலகாலமிருந்ததை தீபிகாபிமானிகள் அறிவார்கள். அப்பொழுது இந்த ஸபையும் தீபிகையும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளத்திற்கு விருத்தமாகவே இருந்ததென்பதை பதிமூன்றுவது வருஷத்தி லவதரித்த இப்பத்ராதிபர் அறியார். தீபிகையில் சிற்சில ஸமயங்களில் ஸ்ரீ அழகியசிங்கரை தூஷித்திருக்கும் வ்யாஸங்களும் தீபிகையில் ஆங்காங்கு அடங்கி இருப்பதும் தீபிகையைப் படித்தவர்களுக்கு தத்காலத்தில் விசதம்."

நாம் பத்ராதிபராக வந்தது ஒன்றேகால் வருஷங்களுக்கு முன்பே ஆயினும் இந்த ஸபை ஆரம்பித்ததுமுதல் நாளது பர்யந்தம் இதனுடைய நடவடிக்கைகளை நன்கு அறிவோம். இந்த ஸ்வாமி ஸாதித்திருக்கிறபடியே இதை முதலில் ப்ரவர்த்தித்தவர்களுக்குள் ஒருவராகிய இந்த ஸ்வாமியும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமனத்தின்கீழ் இருக்கும் ஸ்ரீ அஹோபில மடத்தின் நடவடிக்கைகளை ஸரிவர நடத்துவதில் ததீய சிஷ்யர்களான தங்களுடைய அபிப்ராயத்தைக் கலந்தே நடத்தவேண்டுமென்று ஸ்ரீ அழகிய சிங்கரை நிர்ப்பந்தித்ததும், அதை அவர் அங்கீகரிக்காமையினால் தீபிகையை ஸ்ரீ அழகிய சிங்கர் அபிமானிக்காமல் நின்றுவிட்டார் என்பதையும் ஸகலரும் அறிவார்கள். இவ்விதம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்வாமியையே நிர்பந்திக்க யத்னித்த இந்த ஸ்வாமி, ஸபையை உண்டுபண்ணி, பிறகு சில வருஷங்களில் ஸ்ரீ ஸ்வாமியின் தூஷணங்களை பொகுப்ரியமாய் அங்கீகரித்துக்கொண்டிருந்து இப்பொழுது ஒருவித தூஷணையில்லாமலிருக்கும் பொழுது நாம் ஸ்ரீ அழகிய சிங்கரிடத்தில் அபசாரப்படுவதாகத் தூஷணம் கூறுகிறார். இதைச் சற்றுப் பராமர்சிப்போம்.

வேதாந்த தீபிகை முதல் ஸம்புடத்தில் 11-வதுபக்கத்தில் "இந்த மடத்தின் ப்ரபாவம் தற்காலம் மிகவும் குறைந்திருப்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. இதனுடைய ப்ரபாவம் குன்றாமலிருக்கும்படி தகுந்த க்ருஷிகளைச் செய்வதற்கென்றே ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யஸபை ஏற்பட்டிருக்கிறது" என்றும், 22-வது பக்கத்தில் ஸபாத்யக்ஷருடைய உபந்யாஸத்தில் 'தற்காலம் இந்த கார்யங்களெல்லாம் பூர்ணமாய் நடந்துவரவில்லை என்பது எல்லாம் நன்றாய் தெரியும், அதற்குக் காரணம் தற்காலம் எழுந்தருளி உள்ள அழகிய சிங்கரின் வார்த்தகப்ரயுக்தமான அசக்தியும், ஸமர்த்தர்களும் ஹிதகாரிகளுமான ப்ரேஷ்யர்கள் வேண்டிய அளவு நியமிக்கப்படாமலிருப்பதுமே என்று பஹுவாய்த் தோன்றுகிறது." 529-பக்கத்தில் "ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ஸம்பந்தமில்லாத வ்யாபாரங்களில்



வ்யாப்ருதர்போலவும், அதற்கு விருத்தமான சிந்தைகளால் உபருத்தர் போலவும் ஸதா கிந்நராக எழுந்தருளி இருந்தாரே ஒழிய" என்றும் "எவ்விதமான ஔதாஸீந்யத்தை ஸ்வாமி வஹித்தாலும்" என்றும் எழுதப்பட்டிருக்கிறது. பிறகு 2-வது ஸம்புடத்தில் 42-வதுபக்கத்தில் ஸ்ரீ அழகியசிங்கரின் ஔதாஸீந்யத்தைப் பற்றியும், 123, 129-பக்கங்களிலும் ஸ்ரீ ஸ்வாமி நடக்கவேண்டிய விஷயங்களில்கூட தாங்கள் குறிப்பிட்டவர்களையே ஸ்வாமிகளாக ஏற்படுத்தவேண்டுமெனவை முதலிய சில நிர்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படி இந்தஸபையை ஆரம்பித்ததுமுதல் ஸ்ரீ மடத்துக்கு அபிவ்ருத்திகரமான ஏற்பாடுகளை தாங்கள் செய்து அதற்கு இணங்கி ஸ்ரீ ஸ்வாமி நடக்கவேண்டுமென்று ஸபையோர்கள் அபிப்ராயப்படுவதாக ஏற்படுகிறது. 136-வதுபக்கத்தில் "ஸ்ரீ பகவான் ஸ்ரீ ஸ்வாமியின் திருவுள்ளத்திலும் வைசத்யத்தைப் பூர்ணமாக ஏற்படுத்தி ஸ்ரீஸந்நிதி கார்யங்களை ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் உகக்கும்படி நடத்திவரவேண்டிய சக்தியையும் மனஸ்ஸையும் ஸ்ரீ அழகியசிங்கருக்குக் கொடுத்து அனுக்ரஹிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்" என்று எழுதப்பட்டிருக்கிறது. 3-வது ஸம்புடத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்வாமி பேரில் கோர்ட்டில் போட்ட பிரியாது வ்யக்தமாக அச்சிடப்பட்டிருக்கிறது. சென்ற சிலவருஷங்களுக்குமுன் தீபிகையின் 11-வதுஸம்புடம் 243-பக்கத்தில் இதற்குமுன் ஆஸ்தானத்தை அலங்கரித்த ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்வாமியைப்பற்றி அப்போது இருந்த கார்யதர்சி 'குமாரரும் ஸ்நுஷையும் மாத்திரம் தங்கியிருக்கிறார்கள். மடத்திலேயே ஒருவெளிஅறையில் வஸித்துக்கொண்டுமடத்திலேயே அப்பவ்யவஹாராதிகளை வைத்துக்கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது' என்று எழுதிஇருக்கிறார். அவைகளெல்லாம் நிற்க அப்படிப்பட்ட ஒருவிதமான நிர்பந்தங்களையோ, அபசாரவார்த்தைகளையோ சொல்லாமல் ஸ்ரீ ஸ்வாமி தீபிகையை அபிமானிக்காமலிருக்கிறது சோகனீயமான விஷயமென்று நம்முடைய சோகத்தை ஆவிஷ்கரித்ததற்கு நம்மை அபசாரப்பட்டவனாக ஸ்ரீ இஞ்சிமேடுஸ்வாமி உத்தேசித்திருப்பது எந்தக் காரணத்திலேயோ என்று தீபிகாபிமானிகள் யோஜிக்கவேண்டும்.

இந்த ஸபைக்கு கார்யதர்சியானது 13-வது வருஷம் முதல்கொண்டிருந்தும், வேதாந்த தீபிகையின் பத்ராதிபத்யம் ப்ராப்தமானது 15-வது வருஷம்முதல்தான். ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்வாமியையாவது மற்ற எந்த ஸ்வாமியையாவது கூடோக்தியாய் நிந்தித்தோமில்லை. ஸ்ரீவைஷ்ணவர்கள் நிறைந்துள்ள இந்தத் தென்தேசத்தில் நமது தீபிகையை ஆதரிக்குமவர்களின் ஸங்கியை ரொம்பவும் ஸ்வல்பமாயிருக்கிறபடியினால் அதை விருத்திசெய்து கொள்வதற்காக மடாதிபதிகள்போல்வார் உதவிபுரிந்தால் மிகவும் நலமாகயிருக்கும் என்று ப்ரார்த்தித்தோமத்தனை. இப்படி ப்ரார்த்தித்தது ஸபலமாகவில்லையே என்று பின்பொரு தீபிகையில் துக்கித்தோம். இது குற்றமா? குறையா? இது எவ்விதமாக அபசாரஹேது?

இதை நாம் ஸ்ரீ அழகியசிங்கரைத் தூஷித்து எழுதினோமென்று தாங்களே இல்லாததை ஆரோபணம் செய்துகொண்டு நம்மை தூஷிப்பது உசிதமல்ல. நிந்தாஹேதுக்கள் எள்ளளவும் ஓரிடத்திலுமில்லை. ஸ்ரீ அழகிய சிங்கர்ஸ்வாமி ஸந்நிதியில் அபசாரப்பட்டிருப்பதாக எழுதியிருக்கிறார். அதை எவ்விடத்தில் எவ்விதமான அபசாரமென்று காட்டுவாராயின் நாம் அதற்குத்தகுந்த அபசார க்ஷமாபணம் செய்துகொள்ள ஸித்தமாக இருக்கிறோம்.

"மேலும் இந்த ஸபையின் ப்ராகபாவமும் தெரியாத சுமார் 40-வருஷத்திற்கு முன் திருக்குடந்தையிலுண்டான சில சர்ச்சையை அநுஸரித்து தார்க்கவேதாந்த வாசஸ்பதி குருச்சை ஸ்ரீ. உப. வே. ரங்காசார்யர் ஸ்வாமியும் முன் இந்த ஆஸ்தானத்தி லெழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கர் பூர்வாச்ரமத்திலும் அருளிச்செய்திருந்த கேசவார்யக்ருபாபாத்ரவிஷயமான க்ரந்தங்களை திருக்குடந்தையில் அச்சிடப்பட்டிருப்பதுகளை நம் முன் பத்ராதிபர் பார்த்து அக்கிரந்தங்கள் அநுவச்யங்கள் என்பதுபோல் ஒருவிதமாய் தூஷித்திருப்பது ஸுமார் நாலு வருஷத்திற்கு முன்பட்ட தீபிகையில் தெரிந்த விஷயம்."

இந்த ஸ்வாமி ப்ரஸ்தாபிக்கும்முன் பத்ராதிபர் எழுதியவிஷயத்தில் நாம் புதிதாகச் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. அந்த பத்ராதிபரின் குறிப்பே போதுமானது. அவர்பொதுவில் இத்தகைய விவாதங்களைச் செய்வது நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்திற்கும், நம்முடைய அநுஷ்டானத்திற்கும், பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திக்கும் கொஞ்சமேனும் பொருத்தமுடையதல்லவென்றும், அப்படி நாம் வீணாக விவாதப்பட்டுக்கொண்டு வ்யவஹாரங்களைச்செய்வது அயலார் நம்மைப் பரிஹஸிப்பதற்கு ஹேதுவாக இருக்கிறதென்று சோகித்து எழுதியிருக்கிறாரேயொழிய ஒரு பாத்திரத்தை உயர்த்தியாவது மற்றொன்றை தாழ்த்தியாவது விவரித்தாரில்லை. இந்த ஸ்வாமி தாமும் இப்படிச்சண்டைசெய்து கொள்வது உசிதம் என்று சொல்லுவாரா? அப்படியிருக்க அதை ஒரு தூஷணமாகச் சொல்லுவது எப்படியோ? நாம் அறியவில்லை.

"அப்படியிருக்க தத்காலம் ஸ்ரீ. உப. வே. திருவஹீந்திரபுரம் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி நிகமபரிமளத்தில் அச்சிட்டுவரும் அடைக்கலப்பத்து வ்யாக்யானத்தில் ந்யாஸோல்லாஸாதிகளை தூஷித்தும் ஸ்வநிஷ்டாதிகளைக்காட்டிலும் ஆசார்ய நிஷ்டையை உயர்த்தியும் எழுதியிருப்பதைமாத்திரம் குறிப்பாக எடுத்து ச்லாகித்து தத்கால பத்ராதிபர் எழுதியிருப்பதும் தீபிகாபிமானிகளுக்குத் தெரிந்த விஷயமே. இதினால் தீபிகை சிலகாலமாய் ஸன்னதி ஸம்ப்ரதாயத்தில் தூஷணோன்முகம்போல் நடந்து வருவதாக சிலர்க்கு ஜனித்திருக்கும் அதிசங்கை ந்யாயமென்றே தோன்றவில்லையா! ஆகையால் ஸமயங்களில் ஸ்ரீ அழகியசிங்கர்களையே தூஷித்தும், ஸ்ரீ அழகியசிங்கர்கள் அநாதியாய் ப்ரவ்ருத்திப்பித்துவரும் ஸத்ஸம்ப்ரதாயத்திலே தூஷணோன்முகமாயும்



வர்த்திக்கிற இந்த தீபிகையை ஸ்ரீ அழகியசிங்கர் விசேஷமாக அர்த்தவ்யயம் பண்ணி ஆதரிக்க இடமுண்டா என்பதை ப்ராமாணிகர்களான தீபிகாபிமானிகள் கவனிக்கவும்."

ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் பகவத்விஷயம் சேட்டலூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமியின் வ்யாக்யானத்துடன் நிகமபரிமள ஆபிஸில் ப்ரசுரம் செய்யப்படும் நிகமபரிமளம் என்னும் ஸஞ்சிகை நமது பார்வைக்கு அநுப்பப்பட்டு நாம் அதை இந்த தீபிகையில் விமர்சம்செய்தோம். பௌத்தக்ரந்தம், ஜைனக்ரந்தம், முமுக்ஷுப்படி இங்கிலீஷில் தர்ஜம், ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு முதலிய அநேக க்ரந்தங்கள் நமக்குக்கிடைக்கும்பொழுது இதில் விமர்சம் செய்யப்பட்டிருக்கின்றன. அதை இந்த ஸ்ரீ இஞ்ஜிமேடு ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கரிடத்திலோ அந்த ஸம்ப்ரதாயத்திலேயோ அபசாரப்பட்டதாக எழுதுவதற்கு எவ்விதமாக ந்யாயமுண்டு? ஸ்ரீ வைஷ்ணவ ஸாமான்யத்துக்கும் பொதுவான பத்ரிகை ஆனபிறகு அந்த ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த பொதுவாக ஒவ்வொரு புஸ்தகங்களை விமர்சம்செய்வது ந்யாயம்தானே. அப்படியே இதுவரையில் தென்கலை வடகலை, ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்கள் முதலிய ஸ்ரீ வைஷ்ணவ வகுப்பினர்களால் அநுப்பப்பட்ட புஸ்தகங்கள் விமர்சம் செய்யப்பட்டிருக்கஇதைக் குறைகூறுவது எப்படிப்பொருந்தும்?

விமர்சம் செய்வதில் க்ரந்தங்களில் அடங்கிஇருக்கும் விஷயத்தை முதலில் அந்த க்ரந்தத்திலிருக்கும் வார்த்தைகளைக்கொண்டே நிரூபிப்பது வழக்கம். இந்த ந்யாயத்தைப்பற்றியே ஸ்வாமி குறிப்பிடும் அடைக்கலப்பத்தின் தாத்பர்யத்தை அந்த க்ரந்தத்தின் வாக்யங்களைக்கொண்டு நிரூபித்தபடி. மேலும் அந்த விமர்சத்தில் ந்யாஸோல்லாஸம் என்னும் க்ரந்தத்தைப்பற்றியாவது ஏதாவது ஒரு ஸ்வாமியினுடைய திருநாமத்தையாவது குறிப்பிடவில்லை. அதில் சொல்லி இருக்கும் விஷயங்களை நாம் அநுவாதம் செய்தோமே அன்றி, நாம் ஸொந்த அபிப்பாரயம் ஒன்றும் சொல்லவில்லை. ஒரு க்ரந்தத்திலுள்ள விஷயங்களை ஸங்க்ரஹித்தால் அந்த க்ரந்தத்திலுள்ள எல்லாவிஷயத்தையும் நாம் ஒப்புக்கொண்டோம் என்று சொல்லுவது ந்யாயமல்ல. அச்சாபீஸில் கொடேஷன்மார்க்குகள் போடாமல் விடப்பட்டன, ஸ்ரீ ஸ்வாமி செய்திருக்கும் உபகாரம் எவ்வளவு என்று சொல்லமுடியாது என்று எழுதி இருக்கிறோம். அது உபகாரமாக நினைக்கிறவர்களுக்கு உபகாரமாகுமே தவிர மற்றவர்களைக் கட்டுப்படுத்தவேண்டுமென்றஎண்ணம் நமக்கு இல்லை. இதைப்போலவே அந்த ஸ்வாமி வ்யாக்யானம் செய்த 'ப்ரபந்தஸாரம்' முதலிய க்ரந்தங்களின் வ்யாக்யானத்தைப் பற்றியும் நாம் விமர்சம்செய்திருக்கிறோம். அப்படியிருக்க இதில் மாத்திரம் ஸந்நிதி ஸம்ப்ரதாயத்தில் நாம் ஏதோ அபசாரப்பட்டதாக இந்த ஸ்ரீ இஞ்சிமேடு ஸ்வாமியின் திருவுள்ளத்தில் தோன்றியதற்குக்காரணம் என்

னவோ நாம் அறியவில்லை. ஆகையால் நம்முடைய ஸம்ப்ரதாயம் பரவி வளருவதற்காக ஏற்பட்ட ஸ்ரீ மடம் முதலான ஸமக்ஷங்கள் தீபிகையை விசேஷ அர்த்தவ்யயம் செய்து ஆதரிக்கவேண்டியது ப்ராப்தம்.

“இப்படி இதன் தசை இருக்கச்செய்தேயும் அடியோங்களுடைய பிரார்த்தனைக்கிணங்கி ஒருவருஷத்தில் 25-ரூபாய் ஸ்ரீஸன்னதியிலிருந்து தீபிகைக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. நடந்தவருஷத்தில் மதுரை ஸபையாருக்கு ஸ்ரீ அழகிய சிங்கரும் ஸ்ரீவானமாமலை ஸ்வாமியும் 50-ரூபாய் அனுப்பியது நம் ஸபையோருக்குத்தெரியும். இதனால் ஸ்ரீஸன்னதியில் முன்சொன்ன அல்ப விஷயங்களை பாராட்டுவதில்லை என்பதை புத்திமான்கள் கவனிக்கலாம்.”

ரூபாய் 25 கொடுக்கப்பட்டதைப்பற்றி ஸ்ரீஅழகியசிங்கர்ஸ்வாமிக்கு பரமபக்தியுடன் தீபிகையிலேயே க்ருதஜ்ஞதை காட்டப்பட்டிருக்கிறது. மதுரைக்கு அனுப்பின ரூபா 50-ம் மதுரை ஸத்காரஸபையார் ப்ரார்த்தனையின்பேரில் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. நாம் கேட்டது தீபிகையை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று. அது ஸபலமாகவில்லையே என்று சோகிக்க நமக்கு பாத்யதை இல்லையா ?

‘இதுநிற்க, ஸ்ரீ அழகியசிங்கரை 100-காபி தீபிகையை வாங்கும்படி பத்ராதிபர் எழுதுகிறார். அதற்காக தத்காலம் வேதாந்ததீபிகையின் உபயோகத்தைச்சற்று விசாரிப்போம். தீபிகை சிலகாலம் அநாவச்யகமாயும் விருத்தமாயுமுள்ள பத்ராதிபரின் குறிப்புகளால் முன்பாகத்தில் நாலிலொரு பங்கும் ஸ்ரீ. உ. வே. திருவஹீந்திரபுரம் நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின் மொழிபெயர்ப்பால் பின் அரைபாகமும் ஆக்ரமிக்கப்பட்டு இதராளுக்கு தகுந்த ஸமயத்திலிடங் கொடாமலிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.’

தீபிகையில் ஐந்து பாரங்கள் அச்சிட்டு வெளிவருகின்றன. அதில் பெரும்பாலும் பத்ராதிபரின் குறிப்புகள் ஒரு பாரத்துக்குள்ளாகவே இருக்கின்றன. சில ஸமயங்களில் நாலு பக்கங்களே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீ சேட்டலூர் ஸ்வாமியின் க்ரந்தங்கள் இரண்டுபாரங்கள் அடங்குகின்றன. பரமபதஸோபானம் ஒரு பாரமும் ஸச்சரித்ர ரக்ஷை ஒரு பாரமும் போக இரண்டரைபாரம் ஸ்ரீ இஞ்சிமேடு ஸ்வாமியின் திருவுள்ளத்துக்கு பாத்திரமாகயிருக்கின்றன. இதில் யார் வேண்டுமானாலும் இடம் எடுத்துக்கொள்ளலாம். இதில் ஸ்ரீஸச்சரித்ர ரக்ஷை முன்னிருந்த பத்ராதிபரால் ஆரம்பிக்கப்பட்டு அதை பூர்த்திசெய்யாமல் விடுவது ந்யாயமில்லையே என்று போடப்படுகிறது. மேலும் தனிக்காபிகள் போடப்பட்டிருப்பதால் இதை பூர்த்திசெய்யவேண்டியது அவச்யமாக இருக்கிறது. ஸ்ரீபரமபதஸோபான வ்யாக்யானமும் ராவ்ஸாஹிப். ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸ ராகவாசார்யரால் ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமியை ப்ரார்த்தித்து எழுதிவைக்க



ப்பட்டு அந்த ஸ்வாமியின் ப்ரார்த்தனையின்பேரில் தீபிகையில்போடப்பட்டு வருகிறது. இந்த க்ரந்தத்தைப்பற்றி மைஸூரிலிருக்கும் வித்யாபூஷணம் ஸ்ரீ உப. வே. கோவிந்தாசார்யர் ஸ்வாமி ஸித்தாந்தத்துக்கு மிகவும் உபகாரம் பண்ணி இருப்பதாக நல்ல அபிப்ராயம் கொடுத்திருப்பது முன் ஒரு தீபிகையில் போடப்பட்டிருக்கிறது. இப்படி இருக்க தீபிகை முழுவதும் இடமில்லை என்று ஸாதிப்பது விந்தையாக இருக்கிறது, என்று நாம் விஜ்ஞாபனம் செய்யாமலே தீபிகாபிமானிகள் அறிவார்கள்!.

தீபிகையில் பெரும்பாலும் நமக்கு அவச்யம் என்று தோன்றுகிற விஷயங்கள் போடப்பட்டுவருகின்றன. அதில் தீபிகையின் ஸௌகர்யங்களையும் ஸபாலோபங்களையும், தத்காலத்து மனுஷ்யர்களுடைய நிலைமையையும், கூடியமட்டில் உசிதம்என்று தோன்றுவதையும் உத்தேசித்து தீபிகையில் ப்ரசுரிக்கப்பட்டுவருகிறது. ஒவ்வொரு வ்யாஸங்களையும் ஒவ்வொரு உபந்யாஸங்களையும் தீபிகையின் சந்தாதாரருக்கும் அல்லது எல்லாபண்டிதர்களுக்கும் அனுப்பி அச்சுப்போடுவது ஸாத்யமா என்னும் விஷயத்தை இந்த ஸ்ரீ உப. வே. இஞ்சிமேடுஸ்வாமியும் மற்ற எல்லாரும் யோஜிக்கவேண்டியது. அவச்யம் அனுவச்யம் என்று நிர்ணயிப்பது பத்ராதிபருடைய கடமை. இது வேறு எவரையாவது வேறு ஒருபாகத்தினரையாவது சேர்ந்ததல்ல. அப்படி இந்த ஸ்வாமிக்கு இஷ்டமில்லாத வ்யாஸமாக இருந்தால் அதைப்பற்றி விசாரித்து கண்டனம் எழுதி அனுப்பியிருந்தால் அதைத் தீபிகையிலேயே ப்ரசுரம் செய்துஇருப்போம்.

நாம் இந்த தீபிகையின் கார்யத்தை நிர்வஹித்தது முதல் 13-வது ஸம்புடத்தில் ஒரு வ்யாஸமாவது இந்த ஸ்வாமி எழுதவில்லை. 14-வது ஸம்புடத்தில் மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம் என்னும்விஷயம் போடப்பட்டதால் அதைக் கண்டித்து இந்த ஸ்வாமி எழுதிய வ்யாஸம் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த விஷயம் போடாமலிருந்தால் இவர் ஒன்றும் எழுதி இருக்கமாட்டார். அதன் பிறகு 15-வது வருஷத்தில் இந்த ஸ்வாமியால் மதுரை ஸதஸ்ஸில் உபந்யாஸம் செய்யப்பட்ட விஷயத்தை எழுதி அனுப்பும்படி பலதடவை எழுதியும் ஸாவகாசமில்லை என்று சொல்லி, அதில் ஒரு பாதியைமாத்திரம் எழுதி அனுப்பினார். அதுவும் தீபிகையில் போட்டிருப்பது எல்லோருக்கும்தெரிந்தவிஷயம். இதை இன்னும் இவர் பூர்த்திசெய்யவில்லை. பிறகு பௌத்ராபத்யநிகரணத்தைப்பற்றி பாடபேத விமர்சம் ஸ்ரீ சேட்டலூர் ஸ்வாமியால் ஆரம்பித்தபிறகு ஷஷ்டிக்கு அர்த்தம் எப்படி ஒட்டும் என்று எழுதவேண்டுமென்று ஒரு லெட்டர் எழுதினார். அதுவும் ப்ரசுரமாகி இருக்கிறது. இப்படி இருக்க இந்த ஸ்வாமியோ வேறு எந்த ஸ்வாமியோ எழுதி அனுப்பிய வ்யாஸத்தை ப்ரசுரம்செய்

யாமல் இருக்கவில்லை. தாங்கள் விஷயப்ரதானம் செய்யாமல் இருந்து கொண்டு நாம் தீபிகையை ப்ரசுரப்படுத்துவதற்காக இதர ஸ்வாமிகளை நிர்ப்பந்தித்து எழுதி ப்ரசுரம் செய்தால் அதைக் குறைகூறுவது எப்படி? இந்த ஸ்வாமி எப்பொழுது எழுதியனுப்பிய வ்யாஸம் ப்ரசுரம் செய்யப்படாமல் நின்றது என்பதை குறிப்பிட்டு எழுதினல் உபகாரமாயிருக்கும்.

இந்த ஸ்வாமி ஏதாவது வ்யாஸம் எழுத அதை நாம் நிறுத்தினது உண்டா? வேறு எந்த ஸ்வாமியாவது வ்யாஸம் எழுதி நிறுத்தினதுண்டா? நாம் விஷய ப்ரதானத்துக்கு அநேகம்பேர்களை யாசித்ததுண்டு. இந்த ஸ்வாமியே எவ்வளவுதடவை யாசித்தும் தமக்கு ஸாவகாசமில்லை என்று எழுதினதை இவர் மறந்தார்போலும். அனுவச்யமாகவும் விருத்தமாகவும் நம்முடைய காலத்தில் ஒருகுறிப்பும் ஏற்படவில்லை. நாம் எழுதினதெல்லாம் தத்காலத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மிகவும் அவச்யமானது, இன்னும் மற்ற ப்ராஹ்மண ஸமூஹத்துக்கே உபயோகமானவை.

"ஸ்ரீ. உப. வே. டி. டி. ரங்காசாரியர் ஸ்வாமி காலத்தில் அபூர்வமான சில விஷயங்களை அந்த ஸ்வாமி குறிப்பில் எழுதி இருந்தாலும் அநாவச்யகமான குறிப்புகள் எழுதக்கூடாதென்றும், அப்படி எழுதினல் தீபிகையின் மஹிமை குறைவு படுகிறதென்றும் பத்திரிகாமூலமாய் ப்ரார்த்தித்திருக்கிறோம்."

இந்த ஸ்வாமி ஸ்ரீ உப. வே டி. டி. ரங்காசார்யரை கேட்டுக்கொண்டபடி நம்முடைய குறிப்புகளில் அனுவச்யமான பாகமிருந்தால் அதைப் பற்றி அப்போதைக் கப்போது எழுதி தெரிவித்திருக்கலாமே. இதுவரையில் ஒன்றும் அப்படிச் செய்யவில்லையே.

"இப்பொழுது குறிப்புகள் அநாவச்யகமாயும் விருத்தமாயும் இருக்கின்றன. அதில் அனுவச்யகமான குறிப்புகள் ஸ்ரீஅழகிய சிங்கரின் ப்ரக்ருத தூஷணம் போன்றவைகள்.'

ஸ்ரீஅழகியசிங்கர் ஸ்வாமியை எவ்விதமாக தூஷித்திருக்கிறோம் என்பதை நாம் அறியவில்லை. கீழே அநேக இடங்களில் குறிப்பிட்டபடியாவது வேறு எவ்விதமாவது தூஷித்ததாக இதுவரையில் ஏற்படவில்லை. கீழே குறிப்பிட்டிருக்கிறபடி தூஷணங்களை ப்ரியமாகப் பொருத்துக் கொண்டிருந்த இந்த ஸ்வாமிக்கு அவ்விதம் மடத்தில் விசாரணைக்குறைவு முறைகளை எடுத்துரைக்காமலும் கேவலம் ஸபையின் துஸ்திதியைப் பற்றி சோகத்தை வெளியிட்ட நாம் ஸ்ரீஅழகியசிங்கர்ஸ்வாமியை தூஷித்து எழுதியதாக இந்த ஸ்வாமியின் திருவுள்ளத்தில் பட்டது ந்யாயமில்லை என்பதை எல்லோரும் அறிவார்கள்.

நம்முடைய குறிப்புகள் மிகவும் ச்லாக்யமென்றும், அபூர்வ விஷயங்களை எடுத்துக் காட்டுகின்றனவென்றும் ஸ்ரீதேரெழுந்தூர் ஆண்டவன்



ஸ்வாமி உகந்தருளி நம்மை தீர்க்காயுஸ்ஸாக இருந்து இந்த கைங்கர்யத்தை நடத்திவரவேண்டுமென்று சென்ற மார்கழிமாதத்துக்கு முன் மார்கழிமாஸத்தில் மிகவும் ஹார்த்தமாக அனுக்ரஹம் செய்தருளினார். இன்னும் அநேக ப்ரோபஸ்ஸர்களும் பெரிய மனுஷ்யர்களும் பத்ராதிபரின் குறிப்புகள் மிகவும் ச்லாக்யமாகயிருக்கிறதென்றும் அத்தால் தாமும் நாங்கள் மெம்பர்களுமானார்களென்றும் நமக்கு எழுதியிருக்கிறார்கள்.

"விருத்தக்குறிப்புகள் ஸ்ரீஸ்வாமி தூஷணத்திற்கடுத்த அஷ்டகை என்று தலையெழுத்துள்ள குறிப்பு முதலானவைகள். இக்குறிப்பில் பித்ருமேத ஸாரத்தின் நிர்ணயத்தை எழுதிவிட்டு, பிறகு தன்னுடைய பித்ருக்கள் எவ்விடத்தில் பூஜிக்கப்படுகிறார்களோ அவ்விடத்தில் தன்னுடைய மாதாமஹர்களும் பூஜிக்கப்பட வேண்டுமென்கிற வசனப்படி மாதாமஹாதிகளுக்கும் மூன்று பிராமணர்களைச் சொல்லி ச்ராத்தம் செய்யவேண்டுமென்று சாஸ்த்ரம் என்று எழுதப்பட்டிருக்கிறது. இது சாஸ்த்ரவிருத்தம். பித்ருமேத ஸாரத்தில் இதற்குமுன் "[illegible]" என்று விருத்தி ச்ராத்தத்தில் மூன்று வர்கங்களுக்கு உத்தேச்யத்வத்தைச் சொல்லி மேல் [illegible]" என்று இரண்டு வர்க்கத்திற்கு மாத்திரமே உத்தேச்ய த்வத்தைச் சொல்லி [illegible] அதற்கு ப்ரமாணமும் காட்டப்பட்டிருக்கிறது. இப்படி இருக்க நம் பத்ராதிபர் மாதாமஹ வர்க்கத்திற்கும் அந்த ச்ராத்தம் செய்யவேண்டு மென்று சாஸ்த்ர மிருப்பதாய் எழுதுகிறார். தர்ப்பணத்தில் சில தேசத்தில் ஆசார பேதமிருந்தாலும் அந்தச்ராத்தத்தில் ஒருவரும் இதுவரையில் விப்ரதிபத்தி பண்ணினதில்லை.

தீக்ஷிதருடைய ச்ராத்த காண்டத்தில் பித்ருமேதஸாரத்தை உதாஹரித்துவிட்டு, '[illegible]' இதி [illegible] என்று விசேஷ விதாநத்தால் [illegible] என்கிற ஸாமாந்ய சாஸ்த்திரத்திற்கு பாதமுண்டென்றறியாத மந்தபுத்தியின் சங்கையை எடுத்து, தந்ந, என்று அதை சாஸ்த்திர ப்ரதர்சனம் பண்ணி தூஷித்திருக்க நம்பத்திராதிபர் மஹர்ஷிகள் சொல்லும் கணக்கில் விருத்தமாய் நிர்ணயம் பண்ணினது பண்டிதர்களனைவர்க்கும் வியப்பையளிக்கிறது. தத்காலம் தென்படும் ஒருபுஸ்தகத்தைப்பார்த்து தர்மஜ்ஞர்கள் எழுதப்படவேண்டிய விஷயத்தில் பண்டிதர்கள் இதை நோக்குவார்களோ என்று யோசிக்

காமல் செய்யவேண்டுமென்று சாஸ்த்ரம் என்று நிர்ணயித்திருப்பது ஸாஹஸமே. இதினால் கலியில் பவிஷ்யத் விஷயங்களை சொல்லும்போது ‘ [illegible] ’ என்று சொல்லியிருப்பது நம் தீபிகையில் ஸ்பஷ்டமாக ஏற்பட்டது. இது ஸ்தாலீபுலாக ந்யாயத்தால் காண்பிக்கப்பட்டது. இத்தகைய அனுவச்யக்குறிப்புகளும் விருத்த குறிப்புகளும் பண்டிதர்களுக்கு இடங்கொடாமல் பாதிபாகத்தை கபளீகரித்திருப்பதால் தத்காலம் இது பண்டிதர்களுக்கு சம்பாவனையாக கொடுக்கும்படியான தசையிலில்லை என்பதை நம் தீபிகாபிமானிகள் கவனிக்கவும்.”

அஷ்டகை என்னும் தலைப்பிட்ட குறிப்பில் நாம் ஏதோ தப்பாக எழுதிவிட்டதாக எழுதி தம்முடைய கோபாவேசத்தைக் காட்டமுயன்றவர் தீபிகையையே உபயோகமில்லை என்று தம்முடைய கோபாக்னியை கக்குகிறார். இதில் நாம் ஒன்றும் தப்பு எழுதவில்லை. அச்சாபீஸுக்கு அனுப்பப்பட்டிருந்த மாத்ருகையில் (மானஸ்க்ருப்டில்) ‘தன்னுடைய பித்ருக்கள் எவ்விடத்தில் பூஜிக்கப்படுகிறார்களோ அவ்விடத்தில் தன்னுடைய மாதாமஹர்களும் பூஜிக்கப்படவேண்டும் என்கிற வசனப்படி மாதாமஹாதிகளுக்கும் மூன்று ப்ராஹ்மணர்களைச் சொல்லி ச்ராத்தம் செய்ய வேண்டுமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அது ஸரியல்ல. எட்டே ப்ராஹ்மணர்கள்தான் என்று விதி இருப்பதால் எட்டுப் பேர்களைச் சொல்லி அஷ்டகாச்ராத்தம்) செய்யவேண்டுமென்று சாஸ்த்ரம்’, என்று எழுதப்பட்டு அச்சுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அச்சுக்கோர்க்கும் பொழுது ப்ராக்கெட்டுகளுக்குள் அடங்கியிருக்கும் வரிகள் அச்சுக்கோர்க்கவிடப்பட்டுப்போயின. ப்ரூப் பார்த்தவரும் மாத்ருகையுடன் ஒத்துப் பார்க்காமல் அர்த்தம் ஒட்டியிருக்கிறதே என்று ப்ரூபை அடிக்கச்சொல்லி விட்டார். அந்த மாஸம் அதிக வேலையிருந்ததால் நாம் ப்ரூப் பார்க்கவில்லை. காபிகள் அச்சிட்டு நம் கைக்கு வந்தவுடன் விட்டுப்போய்விட்டதே என்று தெரிந்தது. நாலாவது ஸஞ்சிகையில் அது விஷயமாக ஒரு குறிப்புப்போட உத்தேசித்திருந்தோம். அதற்குள் அவஸரமாக ஒரு கான்பரன்ஸுக்காக நாம் பம்பாய்க்குப் போகவேண்டும்படி நேரிட்டதால் அதை நாலாவது ஸஞ்சிகையில் போடமுடியவில்லை. ஆகையால் இந்தக் குறிப்பை 5-வது ஸஞ்சிகையில்போட உத்தேசித்திருந்தோம். நமக்கு எழுதி இருந்தால் வஸ்துஸ்திதியைத் தெரிவித்திருக்கலாம். வஸ்துஸ்திதி இப்படியிருக்க அனுவச்யமாய் ஏன் தூஷிக்கவேண்டும்? ஆகையால் இந்த ஸ்வாமியால் அனுவச்யமாய் ஏதோ கோபத்தைவைத்துக்கொண்டு வீணாக நம் பேரில் ஏற்றப்படும் குற்றங்கள் நம்மிடமில்லை என்பதை தீபிகாபிமானிகள் அறிவார்கள்.

“ஒருவர் வ்யாகரண மஹாபாஷ்ய பங்க்திகளை ஸரளபதங்களான அனுஷ்டுப் ச்லோகங்களால் ஸங்க்ரஹித்து அதற்கு பதமஞ்சரி என்று பெயரிட்டு இந்த க்ரந்தத்தால்



ப்ரயோஜனமுண்டா என்பதைச் சொல்லவேண்டுமென்று ஒரு பண்டிதரிடத்தில் சோதனைக்கு அனுப்பினோம். அவர் அதைப்பார்த்துவிட்டு, ‘ [illegible] ’ என்று பதில் எழுதி அனுப்பினதாகக் கேள்விப்படுகிறோம். அதுபோல் ஸச்சரித்ரரக்ஷா சததூஷணீ மொழிபெயர்ப்புகள் மூலான்வயத்தில் சக்தி உள்ள பண்டிதர்களுக்குப் பிரயோஜனமில்லை. இது நிற்க, ஸச்சரித்ராரக்ஷா சததூஷண்யாதி மூலான்வயத்தில் சக்தி இல்லாதவர்களுக்கு மீமாம்ஸா ஜடிலமான ஸுதர்சன பாஞ்சஜன்யதாரணாதி விதிகல்பநாதி மொழிபெயர்ப்புகளுக்கும், மஹாவித்வான்களுக்கும் துரவகாஹமான சததூஷணியின் அநுமாநாதி மொழிபெயர்ப்புகளுக்கும் ஸுதார்த்தமும் ஏற்படாதென்கிறவிஷயம் நிஷ்பக்ஷ பாதிகளான தீபிகாபிமானிகளுக்குத் தெரிந்தவிஷயம். 100-க்கு 2-விதம் சிலர்க்கு உபயோகப்படுமோ என்பதும் ஸம்சயிக்கவேண்டியதுதான். இத்தகைய மொழிபெயர்ப்பு தீபிகையின் பின்பாதியை கபளீகரித்திருப்பதாலும் இது பண்டிதர்களுக்காவது பாமரர்களுக்காவது பத்ராதிபர் சொல்லுகிறபடி ஸம்மானிக்கும்படியான தசையில் தத்காலமில்லை என்பதை அஸ்மதாதிகள் சொல்லவேண்டுமோ? ஆகையால் பத்ராதிபர் சொல்லுகிறபடி ஸ்ரீ அழகியசிங்கர் 100-காபிவாங்கி யாருக்குக்கொடுப்பதென்பதை யோஜிக்கவும்”.

ஸ்ரீ ஸச்சரித்ரரக்ஷை போட்டபிறகு மெம்பர்களானவர்கள் 140, ஸ்ரீ பரமபதஸோபான வ்யாக்யானம் போட்டபிறகு அதிகமான மெம்பர்கள் 174 - தனிக்காபிகள் வேண்டுமென்று அநேககடிதங்கள் வந்திருக்கின்றன. இவ்விதம் தீபிகையை வாங்கி வாசிப்பவர்களுக்கு மிகவும் உத்ஸாஹமுள்ள கார்யத்தை இவர் ஏகதேசம் தூஷிப்பதால் இதற்குக் காரணம் இவர் எழுதி இருப்பதுமாத்ரமல்ல என்று ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. இந்த ஸச்சரித்ரரக்ஷை நாம் இந்த பத்ராதிபரின் தொழிலை அங்கீகரிப்பதற்கு முன்பேயே உபக்ரமிக்கப்பட்டது. இது பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் உபயோகமுள்ளது என்பதை நாம் ஸவிநயம் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறோம். இது ஸ்ரீவைஷ்ணவஸச்சரித்ரத்துக்கு அந்ய மதஸ்தர்கள் ஆக்ஷேபிக்காதபடி வேலிகட்டின ஸ்ரீதேசிகனால் ஸாதிக்கப்பட்ட க்ரந்தமானபடியினால் அதினுடைய ஸர்வோத்க்ருஷ்டத்வத்தை நாம் ப்ரதிபாதிக்க வேண்டியதில்லை. அப்படிப்பட்ட ஆசார்யனுடைய ஸ்ரீஸூக்திகளுக்குள் இது ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மிகவும் முக்யமானது. உபயகலையாராலும் ஆதரிக்கப்படக்கூடியது. நம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு ப்ரதானாம்சமான ஸுதர்சன பாஞ்சஜன்யதாரணம், ஊர்த்வபுண்ட்ரம், பகவந் நிவேதிதத்தின் மஹிமை, முதலியவைகளை ப்ரதிபாதிப்பதினால் இது நம் ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவருக்கும் மிகவும் உபயோகப்படக்கூடியது. ஆகையினால் இதை ப்ரசுரிக்க ஆரம்பித்தார்கள். மூல க்ரந்தமே [illegible] [illegible] ப்ரசுரம் செய்வதினால் [illegible] [illegible] பண்டிதர்களுக்கும் உபயோகமுள்ளது என்பது [illegible]

ஸ்வாமியும்மறுக்க முடியாது. அஸ்மதியர்களான ஜ்ஞானஹீனர்களுக்கும் விசேஷமாகத் தெரியாவிட்டாலும் தமிழ் பொழிப்புரையிலிருந்து ஸமுதாய அர்த்தம் ஏற்படுகிறபடியினால் எங்களுக்கும் பிரயோஜனமுள்ளதாயிற்று. இப்படி ஸகலருக்கும் ப்ரயோஜனமுள்ளதை நிஷ்ப்ரயோஜனம் என்று ஸாதிப்பது முழுப் பூஷணிக்காயை ஸாதத்தில் வைத்துக்கொண்டு இல்லை என்று ஸாதிப்பதைப் போலிருக்கிறது.

நிற்க ஸ்ரீசததூஷணிக்கும் நமது தீபிகைக்கும் ஒருவித ஸம்பந்தமில்லாமலிருக்க அநாவச்யமாய் அதை இங்கு எடுத்து நம்மேல் ஒரு குறை கூறுவது ந்யாயமா என்பதை இந்த ஸ்வாமியே பராமர்சிக்கக்கடவர். இந்தஸ்வாமி இதைப்பற்றி எழுதுவது அநாவச்யதமம். அது தீபிகையில் ப்ரசுரிக்கப்படவுமில்லை, தீபிகையிடமிருந்து எவ்வித ஒத்தாசையையும் எதிர்பார்க்கவுமில்லை. வைதிகாக்ரேஸர்களாய் பரமஹம்ஸபரிராஜகாசார்யரகளாய் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளினாலும், லௌகிகப்ரமுகர்களினாலும் ஆஸ்திகர்களினாலும் தங்கள் ஜ்ஞானஹீனர்கள் என்பதை நன்கு அறிந்திருந்தபோதிலும் ஸ்ரீ தேசிகனுடைய ஸ்ரீஸூக்தி ப்ரசாரணமாகையினாலே இதுவே ஸ்வயம் ப்ரயோஜன்மான கைங்கர்யம் என்கிற அநுஸந்தானத்தை உடையவர்களினாலும் விசேஷமாக அபிமானிக்கப்பட்டு த்ரவ்யஸஹாயம் செய்யப்பட்டிருப்பதினால் இது ப்ரசுரம் செய்யப்பட்டிருப்பதை இந்த ஸ்வாமி தெரிந்து கொள்ளவில்லை போலும். திவான் பஹதூர் ஸ்ரீ உ.வே. வி. கே. ராமாநுஜாசார்யர் ஸ்வாமி இதற்கு முன் வருஷத்தில் திருவஹீந்திரபுரத்தில் நடந்த ஸ்ரீ தேசிகன் உத்ஸவத்தில் கூடின வித்வத்ஸபையில் ஸ்ரீ சததூஷணி மொழிபெயர்ப்பை விஸ்தாரமாய் புகழ்ந்து பேசினதும் எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். ஸ்ரீமத் தேரெழுந்தூர் ஆண்டவனும் அதை உகந்தருளி மிகவும் க்ருபை கூர்ந்து தம்முடைய சிஷ்யர்களுக்கு ப்ரவசனம் செய்வித்து ஷை வித்வத் ஸதஸ்ஸில் பரீக்ஷ்யர்களாக அவர்களை அனுப்பி இருந்தார். அந்த ஸ்வாமியும் இந்த க்ரந்த ப்ரசாரணத்திற்கு விசேஷஉபகாரம் செய்துவருகிறார். மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் ஸ்ரீ உ.வே. தேசிகாசார்யர் ஸ்வாமி இந்த வருஷம் ஸ்ரீ தேசிகன் உத்ஸவத்தில் நடந்த வித்வத்ஸதஸ்ஸில் இதை மிகவும் உகந்தருளினர். இப்படிப் பண்டிதர்களினாலும் லௌகிகர்களினாலும் ச்லாகிக்கப்படும் இந்த க்ரந்த ப்ரசாரணத்தை நிஷ்ப்ரயோஜனம் என்று சொல்ல இந்த ஸ்வாமி முன்வந்தது எப்படியோ ?

இந்த க்ரந்தம் 40-வாதத்துக்குமேல் அச்சிடப்படாமலிருந்தது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். அதை பூர்த்தியாய் 66-வாதங்களையும் லுப்தமாகாமல் அச்சிட்டு ப்ரசுரம்செய்வது முக்யமான கைங்கர்யமல்லவா ? நாகராக்ஷரம் தெரியாத பெயர்களுக்கு இதை க்ரந்தாக்ஷரத்தில் அச்சிடுவதால் மூல க்ரந்தம் ப்ரசுரமாகாதா ? மேலும் இதற்குமுன் நாகரத்தில் ப்ரசுரமாகி இருக்கும் க்ரந்தத்தில் ஒவ்வொருவாதங்களுக்குள்ள பெயர் தலைப்பிலில்லாமலும் விஷயங்களின் பிரிவுகளில்லாமலும் போடப்பட்டிருப்பதை பரிஷ்காரத்துடன் க்ரந்தாக்ஷரத்தில் பூர்த்தியாகப் போடுவது உசிதமல்லவா ? ஸ்ரீ சேட்டலூர் ஸ்வாமியினுடைய தர்ஜமாவின் ஸம்பந்தம் மாத்திரத்தால் மற்ற எல்லாவற்றையும் மறந்து தீபிகையில் சததூஷணியை அச்சிடுவது அநாவச்யமென்று இந்த ஸ்வாமி ஸாதிப்பது அழகாகுமா? மேலும் இத்தனை ப்ரமுகர்களும் விவேகிகளும் ஆதரிக்கும்பொழுது இவர் ஒருவர் தூஷிப்பதால் அதின் ப்ரயோஜனத்தை மறைக்கமுடியுமா? தீபிகையில் ஒருவித ஸம்பந்தமில்லாமலிருக்கும்பொழுது அதைத் தூஷித்திருப்துப அநாவச்யமாகுமே ஒழிய அந்த க்ரந்தத்தை அச்சிட்டு வெளியாக்குவது அநாவச்யகம் என்பதை ஒருபோதும் ஒரு தடஸ்தர்களும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

நமக்கு கார்டு எழுதின ஐப்பசிமீ 20உவரையில் இந்த தீபிகைக்கு சிபார்சுசெய்வது மிகவும் உசிதம் என்று திருவுள்ளம்பற்றி உத்கடப்ரயத்னம் செய்ததாகவும், அது ஸபலமாகவில்லை என்பதை நமக்குத் தெரிவிப்பதே லஜ்ஜை என்றும் எழுதிஇருப்பதால் நம்மிடத்திலும் தீபிகையினிடத்திலும் இந்த ஸ்வாமிக்கு எவ்வளவு ப்ரீதியும் ஆதரவும் இருந்தது என்று வ்யக்தமாக வில்லையா ? ஏறக்குறைய இரண்டுமாஸத்துக்குள்ளாக இந்த தீபிகை அநாவச்யமான கார்யம், விருத்தமான கார்யம், இதை ஸ்ரீஅழகியசிங்கர் ஸம்மானிக்கும் தசையிலில்லை என்று கீழ்விவரித்த தூஷணங்களை ஆரோபித்து எழுதுகிறார். அப்போது அவ்விதம் எழுதினதற்கும் வெகு சீக்கிரத்தில் தம்முடைய ஸ்வரூபத்தையே மாற்றிக்கொண்டு இவ்விதம் எழுதியதற்கும் காரணம் எது என்பதை தீபிகையைப் படிக்கும் நீங்களே யோஜித்துக்கொள்வீர்களாக. இப்பொழுதுதான் இவர் ஆதிமுதல் படித்துப்பார்த்தாரோ? விஷயங்களை இப்போதுதான் பராமர்சித்தாரோ? வேறு எந்தக் காரணமோ ? நாம் அதை எடுத்துரைக்காமல் விட்டுவிடுகிறோம். 100-காபிகளை வாங்கி ஒவ்வொரு மடத்தில் ஒரு காபியை வைத்து மிகுந்ததை படிக்க இஷ்டமிருந்து கையில் பணமில்லாதவர்களுக்குக்கொடுத்து உதவக் கூடாதா? இந்த 100-காபிதானு வாங்கலாம். இதுவும் வாங்கலாம். இன்னும் ஜாஸ்தியும் வாங்கலாம். மனஸில்லாமல்போனால் யார் என்ன செய்யலாம் ?

" மேலும் இதில் ப்ரமாணிக பொது பத்ரிகைகளுக்கு விலக்கான சில வ்யாபாரங்கள் நடப்பதை தீபிகாபிமானிகள் கவனிக்கவேண்டும். ஒருவர் விஷயம் எழுதினால் அதை வேதாந்ததீபிகையின் மூலமாய் தெரிந்துகொண்டு பிறகு மற்றொருவர் தூஷித்தே பூஷி

த்தோ மறுமாத பத்ரிகையில் எழுதவேண்டும். பத்ராதிபர் விலக்காக இந்நியமமென்பது ப்ரமாணிகம். இப்படி இருக்க ஆடிமாஸத்திய ருக்மிணீ லிகிதத்தின் விஷயம் அச்சிடும்போதே ஸ்ரீ. உப. வே. சேட்டலூர் ஸ்வாமி ஸந்தேஹத்தையும் கீழே சேர்த்து அச்சிட்டிருப்பது ந்யாயமா? புரட்டாசிமாத தீபிகையில். போக்த்ராபத்யதிகரண ஸாராவளீ விஷயத்தில் ஸ்ரீ. உப. வே. திருமலை தாதாசார்யர் ஸ்வாமி ஸந்தேஹத்தையும் அதற்கு ஸ்ரீ. உப. வே. சேட்டலூர் ஸ்வாமி ஸமாதானத்தையும் ஒரே ஸஞ்சிகையில் ஒரிடத்திலேயே சேர்த்து ப்ரசுரப்படுத்துவது ந்யாயமா? ஒருவர் எழுதின விஷயத்தை அச்சிடுவதற்கு முன் பத்ராதிபர் மற்றொருவருக்குக் காண்பிப்பதும் தோஷமோ? குணமோ? பண்டிதர்களெழுதினபடி அச்சிடுவதைவிட்டு அதில் சிலபங்க்திகளுக்கு அர்த்தமாகாமல் விபரீதார்த்தம் செய்துகொண்டு அச்சிட விவாதப்படுவதும் பொது பத்ரிகைக்கு அழகாகுமா?"

இவ்விதம் ஸ்ரீஇஞ்சிமேடுஸ்வாமி ஸாதிப்பது ந்யாயமல்ல. ஆங்கிலேயர் வழக்கத்திலும் நம்முடைய ஆசாரத்திலும் முதலில் ஒரு விஷயத்தை சர்ச்சைசெய்ய ஆரம்பித்தவருக்கு பத்ராதிபர் பின்வரும் ஆக்ஷேபங்களை அப்போதைக்கப்போது காட்டி ஆக்ஷேபங்களையோ ஆமோதனத்தையோ வாங்கி அச்சிடுவது வழக்கம். ப்ரசுரமாகிறவரையில் கோப்யமென்றும், மாத்ருகையை அச்சிட்டு வெளிப்படுத்தினால் பரஸ்யம் என்றும் ந்யாயம்சொல்ல உதவுமா? இந்த ஸ்வாமி புதிதாய் பத்ரிகையின் ரூல்களை ஸ்ருஷ்டிக்கிறார்போலும். இந்த ஸ்வாமி பிறர் விஷயத்தில் நாம் அபசாரப்பட்டிருப்பதாக ஏன் வகாலத்து வாங்கிக்கொள்ளவேண்டும்? திருவஹீந்திரபுரம் ஸ்வாமிக்கு தீபிகையிலிருக்கும் விசேஷ ஸம்பந்தத்தைக்கொண்டு, அவர் ப்ரூப்பார்க்கும்போதும் ஏற்பட்ட ஸந்தேஹத்தை அந்த ஆடிமீ தீபிகையிலும், மறுபடியும் ஸ்ரீ உப வே. ஸ்ரீசைலதாதாசார்யர் ஸ்வாமியின் ஸந்தேஹத்தையும் அதற்கு ஸ்ரீ சேட்டலூர் ஸ்வாமியின் ஸமாதானத்தையும் காலஹரணமில்லாமல் சீக்கிரம் முடிவுபெறவேண்டுமென்று ப்ரசுரம் செய்திருக்கிறோம். அந்த ஸ்வாமி; தீபிகையில் ப்ரசுரப்படுத்தப்படும் விஷயங்களில் ஸந்தேஹாதிகளை நிவர்த்திப்பிக்கிறதற்காக நிர்வாஹ கமிட்டியாரால் ஸபையின் பண்டிதராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகையினால் இதில் ஒருவிதமான தோஷத்தையும் நாம் காணவில்லை.

ஒரு பொது பத்ரிகையில் ஒருவர் எழுதின விஷயமும் மற்றவர் எழுதின தூஷணமும் இரண்டையும் சேர்த்து அச்சிடவில்லையா. விஷயங்களை எழுதினால் அதற்கு பதிலாக விஷயங்கள் எழுதினால் ஸமாதானமாகுமே ஒழிய சரித்திரங்களை எதுவதும் அனாவச்யமான உத்ப்ரேக்ஷைகளை உபயோகப்படுத்துவதும் அனாவச்யம் என்று விஜ்ஞாபித்துக்கொண்டோம். போக்த்ராபத்யதிகரணத்தைப்பற்றி ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமி எழுதினதற்கு கண்டனம் எழுதினால் அதை நாம் அச்சிடுவது அவச்யமாகும். அப்படிக்கில்லாமல்



காஞ்சிபுரத்தில் நடந்த சரித்ரங்கள் எவ்விதத்தில் உபயோகப்படும். மேலும் ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமி "கௌஸஹாஜாம்" என்னும் பாடத்தை ஸ்ரீநாவல்பாக்கம் ஸ்வாமி முன்னமேயே ஸாதித்திருக்கிறார் என்றும், "இந்த விஷயங்களை எல்லாம் ஸபாத்யக்ஷ ஸ்வாமி முகமாயோ வேறொரு மூலமாகவோ கேட்ட ஸ்ரீ. தி. நரஸிம்மாசார்யர் ஸ்வாமி ஆடிமீத்தில் தீபிகையில் "கௌஸஹாஜாம்" என்கிற பாடத்தை தாமூஹித்ததாகவோ, ஸ்ரீநாவல்பாக்கம் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி கண்டுபிடித்ததாகவோ ஒன்றையும் விவரிக்காமல் "கௌஸஹாஜாம்" என்ற பாடமே மிகுந்த ஸ்வாரஸ்யமுடைத்தாயிருக்கிறது என்று ஆரம்பித்து அதற்கனுகுணமாக ஸ்ரீபாஷ்ய ஸ்வாரஸ்யங்களை காட்டி பூர்த்திசெய்தார்' என்று எழுதியும், மைஸூர் மஹாபண்டிதர் ஸ்வாமி சேட்டலூர் ஸ்வாமி "இந்த பாடத்தை இந்த ஸ்வாமியே கண்டுபிடித்ததாய் எண்ணி", என்று எழுதி இருப்பதைப் பார்த்தால் ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமி தாமாகச்சொல்லவில்லை ஸ்ரீநாவல்பாக்கம் ஸ்வாமி சொன்னதைக்கேட்டு சொல்லுகிறார் என்று அர்த்தமாகவில்லையா? அப்படிப்பட்ட கதைகளை அனாவச்யம் என்று விஜ்ஞாபித்துக்கொண்டோம். அதை அப்படியே அச்சிட வேண்டுமென்றாலும் அச்சிட்டுவிடுகிறோம். நமக்கு அதனால் லாபமுமில்லை நஷ்டமுமில்லை.

மேலும் ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமிக்கு சில வருஷங்களுக்கு முன் ஸ்ரீதேசிகன் உத்ஸவத்தில் கூடின ஸதஸ்ஸில் ஸ்ரீ. உப. வே. கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியால் ப்ரார்த்திக்கப்பட்டு எல்லா ஜனங்களும் ஒப்புக்கொண்டு கொடுக்கப்பட்ட 'பண்டித பூஷணம்' என்னும் பிருதை தீபிகையில் டைடில் பேஜில் ப்ரசுரித்திருந்தும் அதை விட்டுவிட்டும், சேட்டலூர் ஸ்வாமி என்ற ப்ரஸித்தமான வ்யபதேசத்தையும் விட்டுவிட்டும். தி. நரஸிம்மாசார்யர் என்று எழுதி இருப்பது உசிதம் என்று தடஸ்தர்கள் ஒப்புவார்களா? அதைநாம் ஸ்ரீ இஞ்சிமேடு ஸ்வாமியிடம் விஜ்ஞாபனம் செய்து ஒருவருடைய டைடிலை மறைத்து மரியாதையைக்குறைத்து எழுதுவது தீபிகைக்கு லக்ஷணமாகுமா, ஆனதால் அதை பூர்த்தியாக எழுதவேண்டுமென்று ப்ரார்த்தித்தோம். அதை இந்த ஸ்வாமி தம்முடைய இஷ்டப்படி சொல்லுவேன், அதை அவ்விதம்தான் அச்சிட வேண்டுமென்றும், பரமைகாந்திகளுக்கெல்லாம் இது அனாவச்யமென்றும், பகவானுடைய ஸம்பந்தத்தைக்கொண்டே நிரூபித்துக்கொள்ள வேண்டுமென்றும் பதில் எழுதி இருக்கிறார். இந்த விஷயத்தில் ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமிக்கு மரியாதை முதலியதை தாம் அபேக்ஷிக்கிறது நியாயமில்லாததாக இருந்தபோதிலும் ஸ்வாமியினிடம் ஆச்ரயித்து காலக்ஷேபங்கள் செய்துகொண்ட அநேக சிஷ்யர்களும் அபிமானிகளும் அதற்கு பதில் எழுதுவார்களே யானால் நாம் பரஸ்பரம் அனாவச்யகமான தூஷணங்களுக்கு இடம் கொடுக்க வேண்டிவருமே என்று யோஜித்தோம். இது தடஸ்தர்களுக்கு லக்ஷணமாகுமா? அழகாகுமா? இத்தாலும் ஸ்ரீசத[illegible]

ணியை தூஷித்திருப்பதாலும் ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமியினிடம் இந்த ஸ்ரீஇஞ்சிமேடு ஸ்வாமிக்கு இருக்கும் திருவுள்ளம் இன்னது என்று நாம் சொல்லவும் வேண்டுமோ? அனுகூலர்களைக்கண்டால் சந்தன குஸுமாதிகளைக் கண்டாற்போலவும், நிலவ்தென்னலைப்போலவும் அபிமத விஷயங்களைப் போலவும் உகந்து வர்த்திப்பார்கள் என்ற சாஸ்திரார்த்தம் இதுதானா?

பத்ரிகையில் அனாவச்ய தூஷணங்களுக்கு இடம்கொடுக்க வேண்டிவருமே என்பதை யோஜிக்கவேண்டியது நமது கடைமையான கார்யமல்லவா? மேலும் ஸ்ரீ இஞ்சிமேடு ஸ்வாமி லேகத்தில் 'ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமிக்கு தேவராஜனிடம் தமக்கிருக்கும் அபூர்வ ப்ரதிபத்தியை காட்டி இருக்கிறார்' என்று எழுதி இருக்கிறார். அபூர்வ ப்ரதிபத்தி என்னும் பதம் புதிதான விச்வாஸம் என்னும் அர்த்தத்தையும் அ என்னும் பதத்தைச் சேர்த்திருப்பதால் அவிச்வாஸம் என்னும் அர்த்தத்தையும் சொல்லக்கூடிய பதமாதலால், இப்படி இரண்டு அர்த்தமாகக்கூடிய பதத்தை ப்ரயோகித்திருப்பதைப்பற்றி வேறுவிதமாக எழுதினால் நலம் என்றும் கேட்டோம். அதற்கு [illegible] என்பதைப்போல் அல்பமான விச்வாஸத்தைச் சொல்லுகிறது என்கிற தாத்பர்யத்தால் தாம் எழுதினது ஸரி என்று ஸமாதானம் எழுதி இருக்கிறார். அப்படிக்கிருந்தாலும் அவிச்வாஸம் என்னும் அர்த்தத்தைக் காட்டக்கூடிய பதமில்லாமல் தம்முடைய தாத்பர்யத்தைக் கொடுக்கக்கூடிய வேறுபதத்தை உபயோகிக்கலாம். அப்படி இருந்தபோதிலும் அது தூஷணம் என்பதில் என்ன ஸந்தேஹமிருக்கிறது. இவ்விதம் எழுதுவதற்கு ஸ்ரீவரதனைப்பற்றி அகௌரவமான வார்த்தை ஏதாவது ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமி ஸாதித்ததாக காட்டமுடியுமா? ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமி எழுதிய ஸந்தேஹத்திற்கு ஸ்ரீ உப. வே. ஸ்ரீசைலதாதாசார்யர் ஸ்வாமி எழுதிய ஸமாதானத்தில் நாயிகாபாவத்தால் ஆழ்வார்களால் அனுபவிக்கப்படாத ஸ்ரீதேவநாதனும் மற்றதேசத்தெம்பெருமான்களும் கவிழ்தலை இடவேண்டுமென்று எழுதி இருக்கிறார். அதற்கு ஸமாதானம் ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமி எழுதும்போதும் ஸ்ரீதேவப்பெருமாள் திருநாமத்தை குறிப்பிட்டு எழுதவில்லை. இப்படிஇருக்க அனாவச்யகமாக ஸ்ரீகூரத்தாழ்வார் ஈடுபட்ட பாசுரங்களை நிரூபித்து ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமியினிடம் தூஷணமாக பார்ப்பவர்கள் அபிப்ராயப்படும்படி எழுதிஇருப்பது ஸரியா? நான் எழுதினது ஸரி, அச்சுப்போடவேண்டுமென்று எழுதுவது பத்திரிகையினுடைய கௌரவத்துக்கு பொருந்துமா?

மேலும் பண்டிதர்களாக இருக்கும் வ்யக்திகள் சிலரே. இவர்களுக்குள் ஒருவருக்கொருவர் மனஸ்தாபமிருக்கக்கூடாதென்று பண்டிதர்களிடமிருக்கும் பக்தியின் மிகுதியாலே அனாவச்யமான சரித்ரம் வேண்டாம் என்று எழுதினதற்கு நம்மை விபரீதார்த்தம் செய்துகொண்டு அச்சிட விவாதப்படுகிறோம் என்று எழுதுகிறார். இதெல்லாம் இப்போதுதான் நடந்தது. இது இவருடைய பாண்டித்யத்திற்கு அழகா?



"இந்தலகைய துர்தசையில் நின்றும் தீபிகை மாறப்போகிறதா? சரண்யன் திருவுள்ளம் எப்படியோ"

பத்ராதிபரின் பேரிலும் தீபிகையின்பேரிலும் இப்போது ஸ்ரீ இஞ்சிமேடு ஸ்வாமியால் ஆரோபிக்கப்படும் குற்றங்கள் அந்த ஸ்வாமியினுடைய திருவுள்ளத்தில் சென்ற கார்த்திகை 20உவரை இல்லை என்பதை நாம் த்ருடமாகச் சொல்லத்துணிகிறோம். பெரிய குற்றவாளியாயும் அபசார களேபரமாகவும் நாமிருந்திருந்தால் இந்தஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் ஸமயத்தில் விஜ்ஞாபித்து உத்கடமான ப்ரயத்னம்பண்ணி இருப்பாரா என்று அன்பர்கள் ஊஹிக்கவேண்டும். எத்தையோ அநாவச்யமான ஸங்கதியை மனதில் வைத்துக்கொண்டு தம்முடைய ஸ்வரூபத்தை மாற்றும்படியான சீற்றத்தை அடைந்தால் நாம் என்ன செய்யலாம்?

இந்த ஸ்வாமியோ பெரியபண்டிதர். இவர் ஒரே அபிப்ராயமுள்ளவராக இருக்கவேண்டியவர் தம்முடைய கோபாவேசத்தால் தம்முடைய ஸ்வரூபத்தையும் மாற்றிக்கொண்டு தீபிகையைப்பற்றியும் நம்மைப்பற்றியும் தூஷிப்பதைப்பார்த்தால் அலெக்ஸாண்டிரியா லைப்ராரியின் கதை ஜ்ஞாபகத்துக்கு வருகிறது

அலெக்ஸாண்டிரியா என்று ஈஜிப்டுதேசத்தில் ஒருபெரியபட்டணம். அதில் லோகோத்தரமான அனேக சாஸ்திரங்கள் உள்ள அநேக புஸ்தகங்கள் அடங்கியுள்ள ஒரு பெரியபுஸ்தகசாலை இருந்தது. காலிப் ஓமார் என்னும் ஒரு மஹம்மதீயன் அந்த தேசத்தைப் பிடித்தவுடன் அவன் அந்த புஸ்தகசாலையை ஒழிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டான். பிறகு வித்வான்களை அழைத்து இந்த புஸ்தகசாலையில் கணக்கில்லாத புஸ்தகங்களிருக்கிறதே, இவைகள் உயர்ந்ததா? நம்முடைய கொரான் உயர்ந்ததா? என்று கேட்டான். அவர்கள் அதற்கு அநேக விஷயங்களடங்கிய புஸ்தகங்களிருந்தபடியால் அந்த புஸ்தகசாலையை உயர்ந்தது என்று சொன்னார்கள். காலிப் ஓமார் மஹம்மதீயனானதால் கொரானுக்கு மேலானது ஒன்றுமிருக்கக்கூடாது, ஆகையால் அதை நாசம் செய்யும்படி உத்தரவிட்டான். இந்த உத்திரவுக்கு பயந்து எவ்வளவோ புராதனகாலமாக ஸம்ரக்ஷிக்கப்பட்டு வந்ததும் பூர்வர்களுடைய ஜ்ஞானமடங்கிய புஸ்தகசாலை வீணாய்ப் போய்விடுமே என்று யோஜித்து, கொரான்தான் உயர்ந்தது என்று சொன்னார்கள். அவன் மஹம்மதீயனானதால்அவன்அப்போதும்கொரானிருக்கும்போது மற்றெதுவும் வேண்டாம் என்று அந்த புஸ்தகசாலையின் புஸ்தகங்களை அவ்வூரிலுள்ளோரெல்லாருக்கும் பங்கிட்டுக்கொடுத்து அவ்வூரார் அந்த புஸ்தகங்களை ஆறுமாதம் விற்கா

எரித்தார்கள். இவ்விதம் பெரிய சாஸ்திரங்கள் அடங்கிய ஒரு புஸ்தகசாலை உலகத்துக்கு உபயோகமில்லாமல் அழிக்கப்பட்டது.

ஸ்ரீராமாநுஜார்யதிவ்யாஜ்ஞையை பரவச்செய்யும் பொருட்டு பெரிய பதத்தை வஹிக்கும் ஸ்வாமியை அநேககார்யத்தில் ப்ரவர்த்தித்தவரும் இந்த ஸபைக்கு ஸஹாயம்செய்யவெண்டுமென்றுகேட்டது ப்ராப்தமாக இருக்க, அப்படி இல்லை என்று சொன்னதால் உண்டான துக்கத்தால் நமது ஸபையின் துஸ்திதியை எடுத்துச் சொல்லி சோகித்ததை ஸ்ரீ ஸ்வாமியை தூஷித்ததாக ஆரோபித்துக்கொண்டு அதற்காக தீபிகையை அடியோடு உபயோகமில்லை என்று சொல்லிவிட்டால் என்ன, என்று ஒரு தீவ்ரமான கோபாவேசத்தைக்கொண்டு சற்றேனும் முன்பின் யோசியாமல் இவ்விதம் தூஷண கார்யத்தில் ப்ரவர்த்தித்திருப்பது உசிதமலல என்பதை நாம் விஜ்ஞாபிக்க வேண்டியதில்லை.

ஆகையினால் இப்படிப்பட்ட பண்டிதர்களுக்கு ததஃ ஶாஸ்த்ர விவர்ஜிதம் ஶூத்ரவஹி கேவலம் என்கிறபடி பாண்டித்யம் ச்ரமத்துக்குமாத்திரம் காரணமாகாமல் ஶமோதமம் ஸர்வ ஶாஸ்த்ராணி விஹிதாநி மநீஷிபிஃ என்கிறபடியே சமத்தைக்கொடுக்கக்கூடிய தசை எப்பொழுது நேரிடுமோ அந்த க்ஷணத்திலேயே தீபிகைக்கும் நம்முடைய ஸித்தாந்தத்திற்கும், நம்முடைய ஸமூஹத்திற்கும் நல்ல ஸ்திதியை பகவான் ஸங்கல்ப்பிப்பார் என்பது நிச்சயம்.

"இதுநிற்க ப்ராக்ருத விஷயத்தில் ஒரு விஜ்ஞாபனம், நம் பத்ராதிபர் எனக்கனுப்பிய கடிதத்தில் எழுதினது மாத்திரமன்றிக்கே ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் ஸவிநயமாய் விஜ்ஞாபித்த பத்ரிகையில் நாங்கள் எழுதும் பத்ரிகையை ஸ்ரீஸந்நிதியில் ஸரிவர வாசித்து கார்யஸ்தர் காண்பிப்பதில்லை என்று கேழ்விப்பட்டு இந்த ஸ்வாமி மூலமாய் தெரிவித்தேனென்று எழுதிஇருக்கிறார். இதைக் கவனித்தால் இவருக்கு பதில் எழுதாத மாத்திரத்தால் ஸந்நிதியில் சில தப்பு நடப்பதாயும் அதை தாம் தெரியப்படுத்தி சீர்திருத்தம் செய்ய முயல்வதுபோல் தோன்றவில்லையா?"

ஒரு பெரியமனுஷ்யர் ஸ்ரீமடத்தில் அதிகாரம்பெற்ற ஒரு கார்யஸ்தரிடம் தீபிகைக்கு ஸஹாயம் செய்யும்படி ப்ரஸ்தாபித்துக் கொண்டிருந்த ஸமயத்தில் அந்தக்கார்யஸ்தர் கார்யதர்சி எழுதும் கடிதங்கள் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதிவரையில் எங்கே எட்டுகிறது என்று சொன்னதாக நம் காதில் விழுந்ததால் இந்த ஸ்ரீஇஞ்சிமேடு ஸ்வாமியை ப்ரார்த்திக்கும்படி எழுதினோம். பெரிய ஸந்நிதானங்களில் ஆயிரக்கணக்கான கடிதங்கள் வருகிற இடத்தில் சில ஸமயங்களில் சில கடிதங்கள் கவனிக்கப்படாமல் நின்று



விடுவது வழக்கம். எல்லா ஆபீஸ்களிலும் ரிமைண்டர்கள் (ஜ்ஞாபகஸூசகபத்ரிகைகள்) அனுப்பப்படுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே அதனால் ஸ்ரீஸந்நிதி ஆபீஸில் பௌட்யமாக இருந்ததாகவாவது, அலக்ஷ்யமாக இருந்ததாகவாவது, தப்பு நடந்ததாகவாவது, நாம் எழுதவில்லை இவ்விதம் ஆரோபித்து தூஷணம் சொல்லுவது உசிதமல்ல. பெரிய இடமானதால் கார்யஸ்தர்கள் தபால்களை பார்க்கக்கூடும். நம்முடைய ப்ரார்த்தனை பத்ரம் எவ்விதம் சேரவில்லையோ என்று நினைத்தோமே ஒழிய எள்ளளவேனும் தப்பு நடப்பதாகவாவது அதை சீர்திருத்த வேண்டுமென்றாவது நாம் எண்ணங் கொள்ளவில்லை. தீபிகைக்கு ஸ்ரீ ஸந்நிதிமூலமாய் ஏதாவது ஸஹாயம் பெறவேண்டுமென்ற எண்ணம் மாத்திரம் தான் நம் மனஸிலிருந்தது. நாம் ஒரு பெரிய மனுஷ்யரிடத்தில் ஒரு வார்த்தையைச் சொல்லும்படி மற்றொரு மனுஷ்யரை வேண்டிக்கொண்டு அவர் சொல்லவில்லை என்று தெரிந்து மற்றொருவரை நீராவது சொல்லவேண்டுமென்று ப்ரார்த்தித்துக்கொண்டால் நாம் அந்த பெரிய மனுஷ்யரிடம் பழியை நினைத்ததாக அர்த்தமாகுமா? காரியஸ்தர்களாவது நம்முடைய பத்ரிகைகளை ஸ்ரீஸந்நிதியில் விஜ்ஞாபனம் செய்து, ஸ்ரீஸந்நிதி திருவுள்ளத்திற்பட்ட ஏதாவது ஒரு ஸமாதானத்தை எழுதித் தெரிவித்திருந்தார்களாகில் நாம் இந்த ஸ்ரீ இஞ்ஜிமேடுஸ்வாமிக்கு கடிதம் எழுதியேயிருக்கமாட்டோம். ஸ்ரீஸந்நிதியில் தப்பை நினைத்திருந்தால் ஸ்ரீஸந்நிதியில் திருவுள்ளம் பற்றினது உசிதமல்ல என்றல்லவோ எழுதியிருக்கவேண்டும் அப்படிக்கில்லாமல் ஸ்ரீஸந்நிதியில் நம்முடைய ப்ரார்த்தனை எட்டும்படி செய்யவேண்டியது என்பதுதான் நம்முடைய முக்கிய தாத்பர்யம். இத்தால் ஸ்ரீஸந்நிதியில் திருவுள்ளம் ஸரியாக இருந்ததென்றும், நம்முடைய ப்ரார்த்தனை திருவுள்ளத்தில் படவேண்டியதுதான் குறை என்றும் நினைத்தன்றோ மறுபடி ப்ரார்த்தனை பத்ரம் எழுதினோம். இப்படியிருக்க இந்த ஸ்ரீ இஞ்ஜிமேடு ஸ்வாமியின் வியாஸத்தில் ஏதோ குறையிருப்பதாக நாம் நினைத்ததாகவும் இவர் அர்த்தம் பண்ணிக்கொண்டிருக்கிறாரே அது எவ்விதம்? இப்படிக்கிருக்க நம்மை அந்யதா ஜ்ஞானமுள்ளவன், அஜ்ஞன், விபரீதார்த்த க்ரஹணம் பண்ணுகிறவன், அதர்மஜ்ஞன், பெரிய மனுஷ்யர்களிடம் பழகாதவன் என்னும் பதங்களை உபயோகப்படுத்தி தூஷித்திருப்பது இந்த ஸ்வாமியின் வைதுஷ்யத்துக்குத் தகுகியன்று

மேலும் பெரிய ஆபீஸ்களில் ஸாதாரண தபால்களுக்கு பதில் உசித காலத்தில் கிடைக்காவிட்டால் ஆபீஸ் எஜமானுக்கு பெயரிலேயோ

அல்லது அவருடைய அந்தரங்க கார்யதர்சிக்கோ எழுதுவது முறை என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இதை அறியாமல் நாம் எழுதியது லௌகிகயாதகம் என்பது எப்படிப் பொருந்தும் ?

'பெரிய மஹான்களிடமாவது பெருந்தன்மையுள்ள லௌகிகர்களிடமிருந்தாவது ஸவினயம் பழகி இருந்தால் இப்படி அலௌகிகமாய் எழுதத்தோன்றுமா ?"

நாம் லௌகிகத்தில் பெரிய உத்தியோகத்திலிருந்து, பெரிய சம்பளமுள்ள துரையுடன்நேரில் பழகும் உத்தியோகத்தை வஹித்து, பட்டணத்தில் அநேக பெரிய மனுஷ்யர்களிடம் ஸஹவாஸம் செய்து கொண்டிருக்கிறவனும், 'ஸஹ்ருதயா' என்னும் ஸம்ஸ்க்ருதபேபரை ஸுமார் முப்பது வருஷங்களாய் நடத்திக்கொண்டு வந்தவனும், ஆஸேது ஹிமாசலத்திலுள்ள வித்வான்களுடன் நேரிலோ கடிதம் மூலமாகவோ பழக்கத்தை உடையவனாகவும்,ஐரோப்யா, அமெரிக்காமுதலிய அயல்தேசங்களிலிருந்து அடிக்கடி நம் இந்தியாவுக்குவந்து கொண்டிருக்கும் மஹாவித்வான்களுடன் அடிக்கடி ஸம்பாஷணாதி பழக்கங்களை செய்து கொண்டிருந்துவருமவனும் இருக்கும்நம்மை ஒருபெரிய மனுஷ்யர்களிடம் பழகினவனல்லன் என்றும்,லௌகிகம் தெரியாதவன் என்றும், இந்த ஸ்ரீ இஞ்ஜிமேடு ஸ்வாமி எழுதுகிறார். கீழேகுறிக்கப்பட்ட ப்ரகாரம் அலௌகிகமாகவும், அனுவச்யமாகவும், தூஷணை அடங்கியதாகவுமுள்ள பத்ரிகையை எழுதி, நம்மை அலௌகிகன் என்று எழுதிய, வித்வானாகிய, இந்தஸ்வாமிக்கு, நாமொரு உபமானம் சொல்லுவது உசிதமல்ல ஆகிலும் இவர் 'ஸுநயீதே ஸ்வாஹா,வெஷ்' ச்லோகத்தையும் அதை ஒட்டினகதையையும் எழுதி இருப்பதைப்போலவே நாமும்,

"பச்யதி பரதோஷாந் தோஷா
நஸதோபி ஜநஸ் ஸதோபி நைவ குணாந் |
விபரீதமிதம் ஸ்வபாவஸித்தம்
மஹிமா மோஹமஹாஜநஸ்யைஷ:" என்று,

(அயலாரிடத்தில் இல்லாத தோஷங்களையும் ஒருவன் பார்க்கிறான். இருக்கிற குணங்களைப் பார்ப்பதில்லை. தன் விஷயத்திலோவெனில் இதுமாறியிருக்கிறது. இது மோஹமாகிற மையினுடைய பெருமை) ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸாதித்த ச்லோகத்தை ஞாபகப் படுத்துகிறோம்.

"வேதாந்ததீபிகை தத்காலம் ஸ்வாதீனமாய் இருக்கிறதென்று யாசித்துக் கொடுக்காத மாத்திரத்தினால் தூஷித்து எழுதலாமா ? இவருடைய ப்ரார்த்தனையினாலேயோ சரண்யன் மஹான்களுக்கு புத்தி ப்ரதானம் பண்ணப்போகிறான் "ஸாஷாம்வாரவ?



இதுமுக்யமான விஜ்ஞாபனம். இதனால் தீபிகையில் அபிமானம் குறைந்ததாக நினைக்கக்கூடாது. ஒழுங்காய் நடந்தால் எல்லோருக்கும் அனுகூலமாய் இருக்குமே என்கிற அவாவினால் இவ்வளவு சொல்லும்படி வந்தது. இதில் தப்பு இருந்தால் தீபிகாபிமானிகள் பொருக்கவும் "

தீபிகை ஸ்வாதீனமாக இருப்பதால் எதையாவது எழுதிவிடுகிறோம் என்று குறைகூறுகிறார். நாம் தீபிகையை நம்மிடம் கொடுக்கும்படி ஒருவரையும்போய் நிர்பந்திக்கவில்லை 11.வருஷகாலமாக இதைநடத்தி தங்களால் முடியவில்லை என்று இதற்க்ள் கைவிடும் ஸமயத்தில் அதை ஜீர்ணோத்தாரணம் பண்ணவேண்டு மென்கிற எண்ணத்தினாலும் இதினுடைய அபிவ்ருத்தியையே ஸதாயோஜித்துக்கொண்டும் இருக்கிற நமக்கு இப்படி. இந்த ஸ்வாமி குறை கூறுவதினால் ஒருவித தோஷமும் ஏற்படாது.

முன்நல்ல ஸ்திதியி லிருந்ததாகவும், இப்போது துஸ்திதிக்கு வந்துவிட்டதாகவும் சோகித்து எழுதி இருக்கிறார். சென்ற நாலு வருஷத்திய வரவு செலவு கணக்குகளையும் சந்தாதாரர்களின் ஸங்கியைகளையும் பராமர்சித்துப் பார்த்தால் தீபிகை முன்னைவிட மூன்று மடங்கு வ்ருத்தி யடைந்திருக்கிறது நன்குவிளங்கும். ப்ரதிவருஷமும் தீபிகை மேல் நடக்குமா என்று அந்திம தசையில்போல் நின்ற ஸபைக்கு மூலதனம் ஏற்படுத்தப்பட்டிருப்பதும் நம்முடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி அநேகர் தீபிகையை அபிமானித்ததினால் அல்லவோ ? தீபிகையை ஆதரிக்குமவர்களிட மிருந்து நமது தீபிகையில் வரும் விஷயங்களைப்பற்றி ச்லாகநீயமான நிருபங்கள் இன்னும்வந்து கொண்டிருக்கின்றன. அதுகளை அச்சிட்டால் ஒரு வருஷத்துக்கு மேல்பிடிக்கும். இந்த ஸ்வாமியால் தீபிகையை கபளீகாரம் பண்ணப்பட்டதாக நினைக்கப்பட்டிருக்கும் திருவஹீந்திரபுரம் சேட்டலூர் வித்வான் பகவத்விஷயம், பண்டித பூஷணம் ஸ்ரீ உப வே நரஸிம்ஹாசார்யஸ்வாமியால் முன் உபக்ரமிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கும் புரஞ்சநோபாக்யானம், பாகவத தனிச்லோகீ முதலியதை பூரணம் பண்ணவேண்டுமென்று நமக்கு வந்திருக்கும் கடிதங்கள் பல.

நாம் மிகவும் மத்யஸ்த த்ருஷ்டியாய் ஒரு ஸ்வாமியைக் கொண்டே தீபிகையை நிறைக்கக்கூடாது என்று பார்த்து மற்ற அநேக ஸ்வாமிகளுக்கு எழுதியும் அவர்கள் தங்களால் முடியாது என்று எழுதி இருக்கிறார்கள். இந்த ஸ்ரீஇஞ்சிமேடுஸ்வாமிக்கு எழுதியும் இவர் தமக்கு ஸாவகாசமில்லை என்று எழுதினதை இப்பொழுது மறந்தார்போலும். இது விஷயத்தில் நாம் அதிகமாக எழுதினால் தற்புகழ்ச்சியாகும் என்று இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறோம்

நாம் ஒருஸமயத்திலும் ஒருவருக்கு பக்ஷபாதியல்ல. அந்த ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமிக்கு இந்த தீபிகையில் தாம் எழுதுவதை ப்ரசுரம்செய்யவேண்டுமென்று நிர்பந்தமில்லை. அவருடைய நிர்வாஹத்திலேயே இரண்டு மாதாந்த பத்ரிகை

கள் நடந்து வருகின்றன. அப்படி இருந்தும் நம்முடைய நிர்பந்தமான ப்ரார்த்தனைக்கிணங்கி விஷயப்ரதானம் செய்தருளும் ஸ்வாமி விஷயத்தில் உள் நடக்கும் விஷயம் இன்னது என்று தெரியாமல் குறைகூறவந்திருக்கிறார்களென்பதைப்பற்றி நமக்கு ரொம்பவும் மனவருத்தமுண்டாகிறது. அந்த ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமி தம்முடைய பெருந்தன்மையினால் இப்படிப்பட்ட லேகங்களை "கொள்ளத்துணியினும் கோதென்றிகழினும் எள்ளத்தனை உகவாதிகழாது என்னெஞ்சில்மதியே" என்பதற்கு விஷயமாக்குவார் என்பது நமக்குத் தெரிந்தவிஷயம்.

இந்த ஸ்ரீஇஞ்சிமேடு ஸ்வாமி தம்முடைய அவாவினால் இப்படி நம்மிடத்தி லில்லாதவற்றை இருப்பதாகக் கொண்டு இப்படி விஸ்தாரமாக எழுதி அனுப்பியதுபோல் இனனும் சில ஸ்வாமிகளின் திருவுள்ளத்தில் இவர் சொல்லி பராபரியாய் கேழ்ப்பதினால் விரோதமிருப்பதாக தோன்றலாம். அப்படி நினைக்க ஈஷத்தேனும் இடமில்லை என்பதை மட்டும் தெரிவிக்க நாம் முன் வந்தோம். தீபிகையில் அபிமானம் வைக்கக்கூடிய ச்ரத்தாவான்கள் ஏற்கனவே ச்ரத்தை உடையவர்களாக இருக்கிறார்களென்றும், இதில் ச்ரத்தை இல்லாதவர்கள் இதை அங்கீகரிக்கமாட்டார்கள் என்பதும் நிச்சயமாய்த் தெரியும் ஆனாலும் பெரியோர்கள் இதில் ச்ரத்தை உடையவர்கள் என்று நம்பிக்கையுடன் அக்காலம் நாம் இதில் நிர்வாஹம் வஹித்திருப்பதினால் பெரியஸ்தானத்தில் அனுக்ரஹத்தைப் பெறவேண்டுமென்கிற ஆஸ்தையினாலும் நாம் எழுதுகிறோம். இதில் ஸ்ரீஅழகியசிங்கர் ஸ்வாமியை நடுவில் வைத்துக்கொண்டு எதை எழுதினபோதிலும் ஸ்வாமிக்கு அபசாரம் என்று சாக்கு எழுதுவது ந்யாயமன்று. இந்த விஷயத்தைப்பற்றி முன்னமேயே ஸமாதானம் எழுதி இருக்கிறோம்.

நாமிப்போது குற்றம் செய்யாதே இருக்க நம்முடைய ஜன்மாந்திர துஷ்க்ருதத்தாலே இந்த ஸ்வாமி இப்போது நம்மை வெறுக்கிறபடியினால் அதற்கு நாம் க்ஷமை கொள்ளவேண்டியது நம்முடைய ஸ்வரூபமாகையினால் இது மூலமாக நாம் அந்த ஸ்வாமியை ஸபையின் முன்னேற்றத்தை மட்டும் உத்தேசித்து கீழ் எழுதிய பதிலுக்கு க்ஷமிக்கும்படி ஸவிநயம் ப்ரார்த்திக்கிறோம்.

பத்ரிகாநேசர்களே ! பத்ரிகாபிமானிகளே ! இப்படிப்பட்ட விஷயங்களை அச்சுப்போட்டு உங்களுடைய காலத்தையும் ஸபையினுடைய பேபரையும் செலவுசெய்ய எண்ணமில்லாதவனாக இருந்தபோதிலும் ஸ்ரீஇஞ்சிமேடு ஸ்வாமியின் பலவித நிர்பந்தங்களினால் அவர் எழுதின பத்ரிகையை அச்சுப்போடும்படி நேரிட்டது. அது நம்முடையவும் நம்முடைய தீபிகையினுடையவும் தூஷணமாக முடிவுபெற்றபடியினால் அதற்கு ஸமாதானம் சொல்லவேண்டியது அவச்யமான விஷயமானதால் அச்சுப்போட்டோம். நீங்கள் எல்லோரும் மன்னிக்கவேண்டுகிறேன்!



உத்ஸவத்தாலே ஸகலஸுகாநுபவங்களையும் கண்டு ஆநந்திக்குமென்பதற்கும் இதுவே நிதர்சநம்.

விழியல்லால் வேலில்லை விண்ணின்மாதர்
மேனியல்லால் வில்லில்லை மீனவர்க்கு
மொழியல்லாலமுதில்லை யென்று முன்னாள்
முத்திவழி முனிந்தடைந்த மோகந்தீர்ந்தோம்
கழியல்லாற்கடலில்லை யென்பார் போலக்
காரியமே காரணமென்றுரைப்பார் காட்டும்
வழியல்லாவழியெல்லாங் கடந்தோமற்று
வானேறும் வழிகண்டோ மகிழ்ந்திட்டோமே. 15

இதி ஸ்ரீகவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீ ப ர ம ப த ஸோ பா ந
|| ஸப்தமோர்ச்சிராதிபர்வ: ||

|| ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ||

---

பதிம் தேவாநாம் ப்ரஜாபதிமுகஸ்தாநாம் விரஜாம் உத்தீர்ய வாஸஸ்த: ஸாநந்தம்" என்று இவர் தாமே அருளிச்செய்தாரிறே.

இப்படி அர்ச்சிராதி கதியாலே சென்றவனுக்கு இந்த மார்க்கம் உபக்ரமமே தொடங்கி ஸந்தோஷமே உண்டாகிறது என்று ஒரு பாட்டாலே அருளிச்செய்கிறார் - 'விழியல்லால்' என்றாரம்பித்து.

[ப - ம்.] விண்ணில் - ஆகாசத்தில், அதாவது ஸ்வர்க்கலோகத்தில் இருக்கிற, மாதர் - ஸ்த்ரீகளினுடைய, விழியல்லால் - பார்வைகளைத் தவிர, மீனவர்க்கு - மீனைத்தனக்கு நிரூபகமாக உடைய மன்மதனுக்கு, மன்மதன் மத்ஸ்யத்வஜன் என்பது ப்ரஸித்தமிறே, வேல் - வேலாயுதம், இல்லை - மேனியல்லால் - அவர்களுடைய சரீரத்தைத் தவிர, வில் - தனுஸ்ஸு,

---

னுக்கு யஜமானனான வருணனையும், தேவேந்திரனையும் ப்ராஜாபதியையும் அடைந்தவனாய்க் கொண்டு விரஜாநதியைத் தாண்டுகிறான். அதற்கப்புறம் உண்டான ஆச்சர்யம் வாக்குக்குத் தூரத்தில் இருக்கிறது, அன்றிக்கே அதற்குப் பிறகு வாக்குக்குத்தூரத்தில் இருக்கிற குணவிபூத்யாதிகளினால் ஆச்சர்யமான பரமாத்மாவை அடைகிறான்.

இல்லை, மொழியல்லால் - அவர்களுடைய வார்த்தையைத் தவிர, அமுது - அம்ருதம், இல்லை, என்று, முன்னாள் - இதற்கு முன்புள்ள காலம் எல்லாம், முத்திவழி - மோக்ஷ மார்க்கத்தை, விவேகம் முதலிய மோக்ஷத்திற்குப் போகும் மார்க்கத்தை, முனிந்து - கோபித்துக்கொண்டு, அதாவது அவற்றை அநாதரம்செய்து நின்ற, மோகம் தீர்ந்தோம் - அஜ்ஞானத்தின் நிவ்ருத்தியை அடைந்தோம், அன்றிக்கே தீர்த்தோம் என்கிற வல்லொத்து மெல்லொத் தாய்க் கிடக்கிறதாகவுமாம், அஜ்ஞானத்தை நிவ்ருத்தி செய்துகொண்டோம், கழி - ஸமுத்திரத்தின் ஜலம் எதிர்த்து ஓடிவரும் சிறிய ஆற்றை, அல்லால் - தவிர, கடல் - ஸமுத்திரம், இல்லை, என்பார்போல - என்று சொல்லுமவர்களைப்போல, காரியமே - பரமாத்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்படுகிற சேதநாசேதந வஸ்துக்களே, காரணம் - ஜகத்திற்குக் காரணம், என்று உரைப்பார் - என்று சொல்லுகிற ஸாங்க்யாதிகள், காட்டும் - காட்டுகிற, அதாவது ஈச்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ரக்ருதி காரணம் என்பார் சிலரும், பரமாணு காரணம் என்பார் சிலரும், ஜீவனே காரணம் என்பார் சிலருமாயிறே அவர்கள் இருப்பது, அப்படிப்பட்ட, வழியல்லா வழி - மோக்ஷத்திற்கு வழியல்லாதவைகளான வழிகள், அதாவது மோக்ஷமார்க்கம் அல்லாதவைகளை மோக்ஷ மார்க்கமாகச் சொல்லுகிறார்கள் என்றபடி, எல்லாம் - எல்லாவற்றையும், கடந்தோம் - தாண்டினோம், மற்று - இதற்குமேலும், வானேறும் வழி - பரமபதத்திற்குப் போகும் மார்க்கத்தை, கண்டோம் - அறிந்தோம், மகிழ்ந்திட்டோம் - ஸந்தோஷத்தை அடைந்தோம். 15

இப்படி திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்
பகவத்விஷயம் பண்டித பூஷணம்
ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்
ஸ்ரீ பரமபத ஸோபாந வ்யாக்யானத்தில்
ஏழாவது அர்ச்சிராதி பர்வம் முற்றிற்று.

॥ ஸ்ரீ: ॥
॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥
॥ அஷ்டமம் திவ்யதேசப்ராப்திபர்வ ॥

வன்பற்றுடன் மயல்பூண்டு மற்றோர் கதியாலினநாள்
என் பெற்றது பெறுந்தானமு மெத்தனைபோதுளதாம்
துன்பற்றதன் துணிவாற்றுயர் தீர்க்கும் துழாய் முடியான்
இன்புற்றநல்வழியாலேற்று நற்பதமெண்ணுவமே. 16

॥ ஸ்ரீ: ॥
॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகாய நம: ॥

## எட்டாவது திவ்யதேச ப்ராப்தி பர்வம்.

இனி பரமபதத்தை அடைவதை விஸ்தாரமாக நிரூபித்தருளப்போகிறவராய் இவ்வளவு நாள் வ்யர்த்தங்களான சிந்தைகளைப் பண்ணின நாம் ஸ்வயம் ப்ரயோஜனமான பரம புருஷார்த்த லாபத்தைச் சிந்திப்போம், இவ்வனுஸந்தானமே நமக்கு ப்ரயோஜனமாகும் என்றருளிச் செய்கிறார் —'வன்' என்றாரம்பித்து.

[ப - ம்] வன் - த்ருடமான, பற்றுடன் - வாஸனையுடன், மயல்-அஜ்ஞானத்தை, பூண்டு-அடைந்து,ப்ராக்ருதமான விஷயாநுபவத்தையேமேலென்று இவ்வளவு நாள் எண்ணியிருந்த வாஸனையினால் அப்படியே மேல் மேல் ப்ரவித்துக்கொண்டு என்றபடி, மற்றோர் கதியால் - உபாயாந்தரங்களினால், அவைகளுக்கு ஸாதனமாக அநுஷ்டிக்கப்பட்ட மற்ற உபாயங்களினால் என்றபடி, இனநாள் - இவ்வளவு காலமாக, என் பெற்றது - நாம் பெற்ற ப்ரயோஜனம் என்ன, அதாவது துக்கம் முழுமையும் நிவ்ருத்தி யடையவில்லையே, ஜன்ம ஜரா மரணாதிகள் இன்னும் தொடர்ந்து வருகின்றனவே என்றபடி, பெறும் - அப்படி அந்த உபாயங்களினால் பலனாக அடையப்படும், தானமும் - பதங்களும், எத்தனைபோது - எவ்வளவு காலம், உளதாம் - இருக்கின்றன, '[illegible]', 'வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் என்பதில்லை' இத்யாதிகளும் இங்கு அநுஸந்தேயம், இத்தால் இப்படி நிரர்த்தகமான சிந்தையை விட்டுவிடவேண்டும் என்பது அர்த்தாத்ஸித்தம், துன்பற்ற - துக்கம் இல்லாத, தன் - தன்னுடைய, துணிவால் - விச்வாஸத்தினால், அதாவது

இப்படி அநாதிகாலம் அநுசித விஷயாநுபவஸங்கத்தாலே அடிக்கடியும் அநந்த து:க்கப்ரசுரமான ஸம்ஸாராடவியிலே யோடின விடாயெல்லாந்தீர அத்யுந்நதமான அர்ச்சிராதிபத்தியில் அமரரோடுயர்விற்சென்று, விஶத ஸ்வாது ஸுரபி ஶீதளமான விரஜா ப்ரவாஹத்தை அவகாஹித்து, அழுக்கற்று, பவித்ரபாணியான அமாநவனுடைய கரஸ்பர்ஶத்தாலே வாஸநாவிஶேஷம்கழிந்தவன் திவ்யதேஶப்ராப்தியாலே ஸர்வேஶ்வரனோடு ஸலோகனாய், அப்ராக்ருத அம்ருதமய விலக்ஷண விக்ரஹயோகத்தாலே ஸரூபனாய்,

---

நிர்ப்பயனாய் நிர்ப்பரனாய் நிஸ்ஸம்ஶயனாய் இருப்பதற்கே காரணமான மஹாவிஶ்வாஸத்தை அங்கமாக உடைய ப்ரபத்தியினால், துயர்தீர்க்கும் - நம்முடைய துக்கத்தை போக்குகிற, துழாய் முடியான் - திருத்துழாயை முடியில் தரித்துக்கொண்டிருக்கும் எம்பெருமான், இன்புற்ற - ஸுகத்துடன் கூடிய, நல்வழியால் - நல்லதான அர்ச்சிராதி மார்கத்தினாலே, 'ஶீதி ஸுகேதா நிராமய:' என்கிறபடியே ஆரம்பம் முதல் ஸுகமாயிருக்கிற வழியினால் என்றபடி, ஏற்றும் - ஏற்றுகிற, நற்பதம் - நல்ல ஸ்தானத்தை பரமபதத்தை என்றபடி, எண்ணுவம் - எண்ணுவோம், வருகிற கல்யாணத்திற்கு நாள் எண்ணிக்கொண்டிருக்குமாப்போல எண்ணிக்கொண்டிருப்போம் என்றபடி.

16

இனி பரமபதத்தை அடையும் ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 'இப்படி' என்றது மேல் 'அர்ச்சிராதிபத்தியில்' என்பதுடன் அந்வயிக்கிறது. அநுசித - நம்முடைய ஸ்வரூபத்திற்குத் தகுந்ததல்லாத, விஷயாநுபவ - ப்ரயோஜனங்களில், ஸங்கத்தாலே - ஆசையினாலே, அநந்த - முடிவு இல்லாத, து:க்கப்ரசுரமான - துக்கம் நிறைந்ததான, ஸம்ஸாராடவியிலே - ஸம்ஸார மார்க்கத்திலே, விடாய் - ஶ்ரமம். அமரரோடு - ஆதிவாஹிகர்களான தேவதைகளுடன், உயர்வில் - உயர்ந்ததான பரமபதத்தில், சென்று-போய், விஶத - அழுக்கில்லாததாயும், ஸ்வாது - ருசியுள்ளதாயும், ஸுரபி - நல்ல வாஸனையையுடையதாயும், ஶீதளமான - குளிர்ந்ததாயும் இருக்கிற, அவகாஹித்து - முழுகி, அழுக்கற்று - தன்னோடு சேர்ந்த பூத ஸூக்ஷ்மங்கள் நிவ்ருத்தியடைந்து. பவித்ரபாணியான - மிகவும் பரிசுத்தத்தைக் கொடுக்கக்கூடிய கையை உடையவனான. கரஸ்பர்ஶத்தாலே - கையினால் தொடுவதினால் வாஸநாவிஶேஷம் - முன்னால் ப்ராக்ருத ஸுகங்களை அனுபவித்ததினால் உண்டான வாஸனையும். திவ்யதேஶப்ராப்தியாலே - பரமபதம் என்கிற திவ்ய தேசத்தை அடைந்தபடியினால், ஸலோகனாய் - ஸாலோக்யம் (பகவானோடு



கீழ்ச்சொன்ன யோக்யதைகளில்லாதார்க்கு 1 'ந தத்ர மூடா: கச்சந்தி' இத்யாதிகளின்படியே கிட்டவரிதாய், பதிவ்ரதாதர்மநிரதரான பரமைகாந்திகளுக்கு ப்ராப்யமாய், அயர்வறுமமரர்களுக்கு அநவரதத்ருஶ்யமாய், அகாலகால்யமாய், அத்யர்கானலதீப்தமாய், அந்யநிரபேக்ஷப்ரகாஶமாய், பரமயோகிவாங்மநஸாபரிச்சேத்யமான நித்யநிரவத்யநிரதிஶயபோக்யதாதி ப்ரகர்ஷத்தையுடையதாய், ஶுத்தஸத்வமயமாய், 2 'கொழுஞ்சோதி யுயரம்'

---

ஒரே லோகத்தில் இருப்பதை) பெற்றவனாய், அப்ராக்ருத - ப்ரக்ருதியின் பரிணாமம் இல்லாத, அம்ருதமய - அம்ருதம்போல் போக்யமான ஶுத்த ஸத்வத்ரவ்யமான, விலக்ஷண விக்ரஹயோகத்தாலே - விலக்ஷணமான திவ்ய ஶரீரத்தை அடைகையாலே, ஸரூபனாய் - (பகவானுடைய ரூபம் போன்ற ரூபத்தை உடையவனாயிருக்கையாகிற) ஸாரூப்யம் பெற்றவனாய். கீழ்ச்சொன்ன - கீழ் பர்வங்களில் நிரூபிக்கப்பட்ட விவேகம் முதலிய. தத்ர - அவ்விடத்தில், மூடா: - மூடர்கள், ந கச்சந்தி - போகிறதில்லை. கிட்ட - அடைவதற்கு, அரிதாய் - அஶக்யமாய். பதிவ்ரதாதர்மநிரதரான - பதிவ்ரதையான ஸ்திரீயினுடைய தர்மம் போன்ற தர்மத்தில் நிஷ்டை உடையவரான அதாவது பதிவ்ரதா ஸ்திரீ எப்படி பர புருஷனை கண்ணெடுத்துப்பார்க்க மாட்டாளோ அதைப்போல இவனும் இதர தேவதைகளைப் பார்க்க மாட்டான் என்றபடி. ப்ராப்யமாய் - அடையக்கூடியதாய். அயர்வு - மறந்து போதல், அறு - அற்றவர்களான, ஜ்ஞான ஸங்கோசம் இல்லாதவர்களான என்றபடி, அமரர்களுக்கு - நித்ய ஸூரிகளுக்கு, அநவரத - எப்பொழுதும், த்ருஶ்யமாய் - பார்க்கத்தக்கதாய், அகாலகால்யமாய் - காலத்தினால் அழிக்கப்படாததாய் அத்யர்கானல - ஸூர்யன் அக்னி இவைகளைவிட அதிகமாக, தீப்தமாய் - ப்ரகாசிக்குமதாய், அந்யநிரபேக்ஷப்ரகாஶமாய் - வேறு ஒரு ப்ரகாசத்தை அபேக்ஷிக்காமல் தானே ப்ரகாசிக்கக்கூடியதாய், பரமயோகி - யோகிஶ்ரேஷ்டர்களுக்கும், வாங்மநஸ - வாக்கினாலும் மனதினாலும், அபரிச்சேத்யமான - அளவிட முடியாததான, நித்ய - எப்பொழுதும் இருக்கிற, நிரவத்ய - ஒருவிதத் தோஷமும் இல்லாத, நிரதிஶய - எல்லை இல்லாத, போக்யதாதி - போக்யமாயிருக்கை முதலிய குணங்களினுடைய, ப்ரகர்ஷத்தை - மேன்மையை. ஶுத்தஸத்வமயமாய் - ஶுத்த ஸத்வமான த்ரவ்யத்தினால் உண்டானதாய். கொழும் - ஶ்லாக்யமான, சோதி - ஜ்யோதிர்மயமான, உயரம் - உயர்ந்த லோகம். சேண்-

1. பாரதம் 2. திருவாய்மொழி

186258

என்றும், 1 'சேணுயர்வானம்' என்றும், 2 'தெளிவிசும்பு' என்றும் சொல்லப்பட்ட நலமந்தமில்லதோர் நாட்டுக்குள்ளே சென்று அங்கே அரமென்றும் ண்யமென்றும் பேருடைய அம்ருதமயஸரஸ்ஸுக்களையும் திவ்யோத்யாந மணிபர்வதஸரித்தடாகாதி விஶேஷங்களெல்லாவற்றையும் உபநிஷத்துக்களிலும் ஸாத்த்வதஸம்ஹிதைகளிலும் ஸ்ரீவைகுண்டகத்யாதிகளிலும் பண்டு பரக்க அநுஸந்தித்தபடியே ஸப்ரகாரமாக ஸாக்ஷாத்கரித்து அந்தமில்பேரின்பத்தில் ஆநந்தவெள்ளம் சூழ்ந்தாற் போலேயிருக்கிற ஐரம்மதீயமென்கிற அம்ருதஸரஸ்ஸைக் கிட்டும். அநந்தரம் ஸர்வேஶ்வர

என்பதும், உயர் என்பதும் உயர்ந்திருப்பதைச் சொல்லும் பதங்கள், மிகவும் உயர்ந்ததான என்றபடி, வானம் - ஆகாசம். தெளி - தெளிந்ததான, விசும்பு - ஆகாசம், அன்றிக்கே தெளி - தெளிவை (ஜ்ஞானத்தின் ப்ரகாசத்தை) கொடுக்கக்கூடிய என்றாகவுமாம், நலம் - ஆநந்தத்திற்கு, அந்தம் - முடிவு, இல்லது - இல்லாததான, அளவில்லாததான என்றபடி, ஓர் - அத்விதீயமான, நாட்டுக்குள்ளே - தேசத்திற்குள்ளே. அங்கே - அந்த லோகத்திலே 'அரம்' இத்யாதியால் சாந்தோக்யத்தில் பரமபதத்தில் அரம் என்றும் ண்யம் என்றும் சொல்லப்படுகிற ஸரஸ்ஸுக்கள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருப்பது ஸூசிதமாகிறது, திவ்யோத்யாந - அப்ராக்ருதமான புஷ்பத்தோட்டங்கள், மணிபர்வத - ரத்னமயமான பர்வதம், ஸரித் - நதி, தடாக - குளம், ஆதி பதத்தினால் வாபிகள் குறிக்கப்படுகின்றன, ஸாத்த்வதம் - ஸ்ரீபாஞ்சராத்ரம், பண்டு - முன்னால், பரக்க - விஸ்தாரமாக, ஸப்ரகாரமாக - அவைகளின் விஶேஷங்களோடு கூட, ஸாக்ஷாத்கரித்து - ப்ரத்யக்ஷமாகப் பார்த்து, அதாவது முன்பு ஶாஸ்திரத்தினால் அறிந்த விஶேஷங்கள் எல்லாம் இப்பொழுது ப்ரத்யக்ஷத்தில் அனுபவிக்கப்படுகிறது என்றபடி. அந்தம் - அளவு, இல் - இல்லாத, பேர் இன்பத்தில் - பெரிய ஆநந்தத்தில், ஆநந்தமயமான லோகத்தில் என்றபடி. ஆநந்தவெள்ளம் - ஆநந்தமாகிற நதியின் ப்ரவாஹம். 'ஐரம்மதீயம்' - என்றது இரா என்று அம்ருதத்திற்குப் பெயர், அந்த அம்ருதத்தினால் எந்த ஸரஸ்ஸில் முழுகுகிறவர்கள் த்ருப்தி அடைகிறார்களோ அது ஐரம்மதீயம் என்றபடி. 'ஐராமயோ மதோ யஸ்மிந்' என்று வ்யுத்பத்தி. ஸர்வேஶ்வரனுடைய - எல்லாவற்றையும் தனக்கு ஶரீரமாக உடைய பகவானுடைய, ஸ்தாவராவதாரம் - ஸ்தாவரரூபமான அவ

1. திருவாய்மொழி- 2. திருவாய்மொழி.



னுடைய ஸ்தாவராவதாரம்போலே ஸுஷமமாய் ஸூரிஸேவ்யமான ஸோமஸவநமென்கிற அஶ்வத்தத்தையணுகும்.

இவனை அபராஜிதையான திவ்யநகரியினின்றும் ஸ்ரீவைகுண்டநாயகன் எதிர்கொள்ள வரவிட்ட ஐந்நூறு திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் நூறுநூறாக ஒருதிரளாய் திவ்யங்களான மாலாஞ்ஜந சூர்ண வாஸ: ஆபரணாதிகளை ஏந்திக்கொண்டு காளங்கள் வலம்புரி கலந்தெங்குமிசைத்தனர் ஆண்மின்கள் வானகமாழியான் தமரென்று உத்கோஷணம் பண்ணி, ஸார்வபௌமகுமாரனை ராஜமஹிஷீபரிஜனங்களெதிர்கொண்டு உபசரிக்குமாப்போலே ஸ்ரீவைகுண்டநாயகனை ஸேவிப்பார்க்கு நிகராக 1 'உடுத்துக்களைந்த' இத்யாதிகளின்

தாரம், ஸுஷமமாய் - அழகாய், ஸூரிஸேவ்யமான - நித்யஸூரிகளினால் ஸேவிக்கத் தகுந்ததான, 'ஸோமஸவநம்' என்றது சந்திரனைப் போல ஸந்தோஷத்தை உண்டாக்குகிறபடியினால் ஸோமஸவனம் என்கிறது என்றபடி.

அபராஜிதையான - ப்ரும்மவித்துக்கள் அல்லாதவர்களால் அடையப்படாததான, 'பராஜிதா' என்பதற்குத் தோற்கடிக்கப்பட்டது, அதாவது தங்கள் வஶமாக்கிக் கொள்ளப்பட்டது என்றர்த்தம். இது ப்ரும்மவித்துக்கள் அல்லாதவர்களினால் தங்கள் வசமாக்கிக்கொள்ளப் படாதது என்றபடி. திவ்யநகரி - அப்ராக்ருதமான பட்டணம், எதிர்கொள்ள வரவிட்ட - எதிர்கொண்டு அழைத்து வரும்படி அனுப்பிய, ஒரு திரளாய் - ஒரு கூட்டமாய், மாலா - புஷ்பமாலை, அஞ்ஜந - மை, சூர்ண - வாஸனைப்பொடி, வாஸ: - வஸ்திரங்கள், 'ஆபரணாதி' ஶப்தம் ஆபரணத்தைக் குறிக்கிறது, அதாவது நூறு அப்ஸரஸ்ஸுக்கள் மாலைகளையும், நூறு அப்ஸரஸ்ஸுக்கள் மையையும் என்றிப்படியே மேலே அந்வயித்துக்கொள்ளவும், ஏந்திக்கொண்டு - கையில் வஹித்துக்கொண்டு, காளங்கள் - காஹளவாத்யங்கள், திருச்சின்ன வாத்யம் என்றபடி, வலம்புரி - சங்கம் இவைகளை, கலந்து - ஏககாலத்தில், எங்கும் - எல்லா இடத்திலும், இசைத்தனர் - உத்கோஷித்தார்கள், ஆழியான்தமர் - சக்ராயுதத்தைத் தரித்துக்கொண்டிருக்கும் பகவானுக்குத் தாஸபூதரான நீங்கள், வானகம் - பரமபதமாகிற க்ருஹத்தை, பரமபதலோகத்தின் மத்யத்தை, ஆண்மின்கள் - ஆளுங்கள். ஸார்வபௌமகுமாரனை - மஹாராஜாவினுடைய பிள்ளையை, ராஜமஹிஷீபரிஜனங்கள் - அந்த ராஜபத்னியின் வேலைக்காரிகள், ஸேவிப்பார்க்கு - ஸேவித்துக்கொண்டிருக்கும் நித்யமுக்தர்களுக்கு,

படியே ஸர்வாலங்காரமான ஸ்வாலங்காரத்தாலே அலங்கரிப்பார்கள்.

அநந்தரம் திவ்யவ்ருக்ஷ ஸாலஜ்ய ஸம்ஸ்தான ஆயதனங்களை யணுகினவளவே ஸர்வகந்தனாய் ஸர்வரஸனாய்ச்சிறந்தவான் சுடரான ஸ்ரீவைகுண்டநாதனுடைய திவ்யகந்தரஸதேஜஸ்ஸுக்கள் வந்து ப்ரவேசிக்க பாரிஜாதபரிமளமும் அம்ருதமும் ஆதித்யனுமுருகியொன்றினுப்போலே உஜ்ஜ்வலித விக்ரஹனமாய்க் கொண்டு ஆச்சர்ய ஆச்சர்ய ஸம்ச்சர்ய ரூபங்களைக்காட்டில் அதிசயிதரா...

---

'உடுத்து' இத்யாதி. 'உடுத்துக்களைந்த நின்பீதகவாடை உடுத்துக் கலத்த துண்டு தொடுத்த துழாய்மலர் சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம்' என்கிற பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறபடியே பகவான் உடுத்துக்களைந்த திருப் பரிவட்டத்தைத் தாங்கள் தரித்துக்கொண்டும், அவனுல் ஶிரஸில் சூடப்பட்ட திருத்துழாய் மாலையைத் தாங்களும் தரித்துக் கொண்டிருக்கும் தாஸர்கள் என்றுப்போலே என்றபடி. ஸ்வாலங்காரத்தாலே - பரமாத்மாவின் அலங்காரம்போன்ற அலங்காரத்தாலே. அன்றிக்கே பரமாத்மாவிற்கு அலங்காரமாய் அவன் களைந்ததாகிய பீதகவாடை முதலிய அலங்காரத்தினுலே என்றபடி யாகவுமாம். இது 'உடுத்துக்களைந்த' என்று உதாஹரித்த ப்ரமாணத்திற்கு அனுகுணமாய் இருக்கும்.

திவ்யவ்ருக்ஷ - தில்யம் என்கிற மரம். இத்தைத்தான் ஸோமஸவனம் என்கிற அஶ்வத்தம் என்று சொல்லியிருக்கிறது என்று பூர்வர்களின் நிர்வாஹம். ஸாலஜ்யஸம்ஸ்தாநம் - ஸாலஜ்யம் என்று சொல்லப்படுகிற ஒரு ஆஸ்தான மண்டபம் ஸால - மதில்களில், ஜ்ய - நாண் கயிறு, முதலான யுத்தம் செய்யும் கருவிகள் வைக்கப்பட்டிருப்பதினுல் அந்த இடத்திற்கு ஸாலஜ்ய ஸமஸ்தானம் என்று பெயர் என்று அர்த்தம் சொல்லப்பட் டிருக்கிறது. ஆயதநம் - வைகுண்டத்தில் இருக்கும் திவ்ய ஸ்தானம் ஸர்வகந்தனுய்-எல்லா வாஸனைகளையும் உடையவனுய், ஸர்வரஸனுய் - எல்லா ரஸங்களையும் உடையவனுய், சிறந்த - உத்க்ருஷ்டமான, வான் - பரமபதத்தில் இருக்கிற, சுடரான - தேஜஸ்ஸான, திவ்ய - அப்ராக்ருதமான. பாரிஜாதபரிமளமும் - பாரிஜாத புஷ்பத்தின் வாஸனையும், ஆதித்யனும் - ஸூர்யனும். ஒன்றினுப்போலே - ஒன்று சேர்ந்தாப்போலே. இது நல்ல வாஸனை, ரஸம், தேஜஸ்ஸு இவை மூன்றும் ஒன்று சேர்ந்திருப்பதற்கு த்ருஷ்டாந்தம், உஜ்ஜ்வலித-ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற, விக்ரஹ- திவ்யவிக்



[illegible]

---

வஸ்துவில் மற்ருெரு பாகத்தைத் தனக்காக வைத்துக்கொண்டு அதை நன்ருகப் பார்த்துவிட்டு, பார்ஷதகணங்களுக்கு யஜமானனுகிய விஷ்வக்ஸேனருக்கு ஆராதனம் செய்வதற்காக ஒருபாகத்தை நிறுத்திவைத்துக்கொண்டு மற்ருெரு பாகத்தினுல் நல்ல ஆசாரமுள்ளவர்களாயும் பகவானிடத்தில் பக்தியுடையவர்களாயும் தான் இருக்கும் க்ராமம் முதலியவைகளில் வஸிக்கிற ப்ராம்மணர் முதலியவர்களை ஸந்தோஷப்படுத்தவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீபௌஷ்கர ஸம்ஹிதையில் விஷ்வக்ஸேனருடைய ஆராதனத்தைச்சொல்லும் அத்யாயத்தில், 'விஷ்வக்ஸேனரை ஆராதனம் செய்யவேண்டும்' என்று துடங்கி, 'முக்யமான பகவானுடைய மூர்த்திக்கு நிவேதனம் செய்யப்பட்டதாயும் ப்ராம்மணர்கள் ஸாப்பிட்டதாய் அதன் மிகுதியாயும், தான்ஸாப்பிடாததாயும் இருக்கிற மதுபர்க்கம் முதலியவைகளினுல் நைவேத்யம்செய்யவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது அப்படியே அவ்விடத்திலேயே 'அந்தப் பகவானுடைய கால வைச்வாநரன் என்று பெயருடைய மூர்த்தி எதுவோ அது ப்ராம்மணர்கள் தேவதைகள் இவர்களை முகமாகவுடைய விஷ்வக்ஸேனர் என்று சொல்லப்பட்டது. அது ஆஹவனீயம் முதலிய பேதங்களை அடைந்துகொண்டிருந்து யஜ்ஞம் செய்பவர்களுடைய மந்திரத்தினுல் பரிசுத்தம் செய்யப்பட்ட ஹவிஸ்ஸை க்ரஹித்துக்கொண்டு எல்லா லோகங்களையும் த்ருப்திசெய்விக்கிறது. இப்படி மந்திரமயமான பரமாத்மாவாகவே த்யானம் செய்யப்பட்ட ஸத்வகுணம் நிறைந்தயாகத்தில் இருந்து மிகுதியா யிருப்பதை ஆசார்யனுடைய மூர்த்தியை உடைய அந்தப் பகவானுக்கு மந்திரத்தினுல் பரிசுத்தம் செய்யப்பட்ட

[illegible]

போஜனமாகிறது எல்லா லோகங்களிலும் வஸிப்பவர்களாயும் நம்மால் ஆவாஹனம் செய்யப்படாதவர்களாயும் இருக்கிற தேவதைகளுக்கும் அவர்களுடைய அநுக்ரஹத்தை விரும்பிக்கொண்டு அவர்களுக்கும் தானே பிரித்து (நிவேதனம்) செய்யவேண்டும்' என்று பகவான் சொன்னார். அப்படியே ஈச்வர ஸம்ஹிதையில் ஆராதனத்தைப்பற்றிச் சொல்லும் அத்யாயத்தில் 'ப்ராம்மணர்கள் முதலியவர்களுக்கு கொடுக்கப்பட்ட மிகுதியை எடுத்து இரண்டுபாகமாகப் பிரித்து அர்க்யம் புஷ்பம் இவைகளினால் பூஜை செய்யப்பட்ட ப்ரபுவாகிய விஷ்வக்ஸேனருக்கு தேவதைகளுக்கெல்லாம் த்ருப்தி உண்டாவதற்காகவும் விக்னங்கள் நிவ்ருத்தி அடைவதற்காகவும் நிவேதனம்செய்து இரண்டாவது பாகம் அநுயாகத்தில் பந்துக்களுடன் ஸாப்பிடக்கூடியதாகும், அது எரிந்துகொண்டிருக்கிற அக்னிக்கு ஸமானமானவராயும் அனேகம் காந்திகளின் கூட்டத்தினால் சூழப்பட்டவராயும் இருக்கிற ஹ்ருதய மந்திரத்தை ஹ்ருதயத்தில் த்யானம்செய்து கொண்டு மிகுதியில்லாமல் ஸாப்பிடத்தக்கதாகும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் 'அநுயாகம் முதலியவைகளில் ஸாப்பிடத்தக்கது' என்று மந்திரங்களுடன் செய்யப்படுகிற ப்ராணாஹுதி சொல்லப்படுகிறது. 'ஹ்ருதய மந்திரத்தை த்யானம்செய்துகொண்டு' என்பதற்கு ஹ்ருதயமந்திரத்தினால் சொல்லப்படுகிற ஹார்த்தாவதாரமாயிருக்கிற பகவானே இதை ஸாப்பிடுகிறார் என்று அநுஸந்தானம் செய்துகொண்டு என்றர்த்தம். ஸங்கர்ஷணர் முதலிய வ்யூஹாவதாரங்களைப்போலவே ஜ்ஞானம் முதலிய ஒவ்வொரு குணங்களுடன் கூடிய பகவானே தானே ஹ்ருதயம் முதலிய ரூபங்களுடன் கூடினவராயிருக்கிறார் என்பது 'கண் என்று



[illegible]

பெயருடைய பகவத் ஸ்வரூபம்' என்றாரம்பித்து ஸ்ரீபௌஷ்கர ஸம்ஹிதையில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப் பிரிக்கவேண்டும் என்று சொல்லியிருப்பதினால் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டது முழுமையும் விஷ்வக்ஸேனர் முதலியவர்களுக்கு நிவேதனம் செய்வது முதலிய வரிசையினால் பரிஹரிக்கவேண்டியது என்கிற இந்தவார்த்தை உசிதமல்ல—பாஞ்சராத்திர சாஸ்திரங்களிலேயே நிர்மால்யத்தை ஸாப்பிடக்கூடாது என்று நிஷேதித்திருக்கிறவசனங்களுக்கு நிர்வாஹம் ஆகமப்ராமாண்யத்தில் செய்யப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது - பாஞ்சராத்திர சாஸ்திரப்படி தீக்ஷை செய்துகொண்டவனைக் குறித்தே ஸங்கேதமான ஆசாரங்களை விதிக்கும் இடத்தில் நிர்மால்யத்தை உபயோகிப்பதைக் கூடாது என்று மறுத்திருக்கிற வசனங்கள் எவைகளோ அவைகள் பார்ஷதர்களுக்கு நிவேதனம் செய்தபிறகு அவைகளைப் பரிஹரிக்கவேண்டும் என்கிற அபிப்ராயத்தினால் சொல்லப்பட்டவைகள் என்றறியத்தக்கது. ஏனெனில் பகவானுக்காக ஸமர்ப்பிக்கப்பட்ட மாலை சந்தனம் முதலியது விஷ்வக்ஸேனர் அங்கீகரித்தபிறகு உபயோகப்படுத்தக்கூடாத தன்மையை அடைகிறது ஆகையினாலேயே ஸாத்விகர்களினால் நிவேத்யம் அதற்குமுன்பேயே அங்கீகரிக்கப்படுகிறது. ஆகையினால் அவை உத்க்ருஷ்டமானவைகள் என்பதற்கே காரணமாகின்றன' என்று சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்வக்ஸேனருக்கு நிவேதனம் செய்யப்பட்டதைப்பற்றி வெவ்வேறான விகல்பங்கள் அந்தந்த ஸம்ஹிதைகளை அநுஸரித்து ப்ரயோகபத்ததி ரத்னாவளீ முதலிய க்ரந்தங்களில் போஜராஜன் முதலியவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் அங்

[illegible]

[illegible]

தந்த க்ரந்தங்களில் அறியத்தக்கவைகள். இப்படியாகையினால் அனேகம் ப்ரமாணங்களினால் நிச்சயிக்கப்பட்ட அர்த்தத்திற்கு விருத்தமாக பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதைப் பரிஹரிப்பது மலையாளம் முதலிய தேசங்களில் சிலரால் அனுஷ்டிக்கப்படுகிறதே அது, நாய்க்கொடையை ஸாப்பிடுவது, ப்ராம்மண ஸ்திரீகள் ஸுராபானம் செய்வது முதலியவற்றைப் போல ந்யாய விருத்தமாக ஏற்பட்டதினால் ஆதரிக்கத்தக்கதல்ல, ஆர்யாவர்த்தம் முதலிய தேசங்களில் வஸிப்பவர்களைப்போல மலையாளம் முதலிய தேசத்தில் வஸிப்பவர்கள் இதரர்களினால் அனுஸரிக்கப்பட வேண்டிய ஆசாரத்தை உடையவர்கள் என்று ஓர் இடத்திலும் ஏற்படவில்லையல்லவா. மலையாளம் முதலிய தேசங்களில் இருக்கிற எல்லோரும் எல்லாவற்றையும் ப்ரமாணத்தில் ஏற்பட்டதையே அனுஷ்டிக்கிறார்கள் என்பது காணப்படவில்லை. அம்மான்பெண்ணைக் கல்யாணம்செய்துகொள்வது ரஜஸ்வலையான ஸ்திரீயைக் கல்யாணம்செய்து கொள்வது முதலியவைகள் இப்பொழுதும் ஒருவிவாதம் இல்லாமல் சிற்சில இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டுவருவதினால். இப்படி போதாயன ஸ்ம்ருதியிலும் விஷ்ணு கல்பத்திலும் சேஷ (மிகுதி) என்னும்பதம் ரஹஸ்யாம்நாயம் பாஞ்சராத்திரசாஸ்திரம் பாரதம் முதலியவைகளை அனுஸரித்திருக்கிற படியினால் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்ட அன்னத்தைப்பற்றியதே.

வாங்குகிறவன் அதை ஸாப்பிடவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டதே, அது உண்மைதான், அப்படி இருந்தபோதிலும் வைஷ்ணவன் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதை வாங்



[illegible]

கிக்கொள்ள வேண்டும், அதை ஸாப்பிடவேண்டும், அதிலும் பகவானுக்கு அஸாதாரணமான நாலுமந்திரங்களினால் ஸாப்பிடவேண்டும் என்பது அறியப்படுகிறது, மற்றொரு ப்ராமாணங்களினால் மறுக்கப்படவும் இல்லை, ஆகையினால் அது தர்மம் என்கிற வகுப்பிலேயே சேர்க்கத்தக்கதாகிறது. அப்படிக்கில்லாவிடில் முன்பு உதாஹரிக்கப்பட்ட ப்ரபலங்களான மற்ற சாஸ்திரங்களுடன் விரோதம் வருமாதலால். அவைகளோடு இதுவும் ஒரே அபிப்ராயத்தை உடையது என்பதும் இந்த க்ரந்தங்களினாலும் பாயஸாந்நத்தைப் பாகம்செய்வது, வேதி, ஆராதனம்செய்யும் இடம், வாஸனை விலாமுச்சைவேர் முதலியவைகளினால் ஏற்படுத்தப்பட்ட இடங்கள், நிவேதனம் செய்யப்பட்ட அன்னத்தை விநியோகம் செய்யும் விதம், ஸ்வாத்யாயம் என்று சொல்லப்படுகிற த்வாதசாக்ஷரத்தை ஜபம்செய்வது முதலிய காரணங்களினால் ஆவாஹனம் உத்வாஸனம் ஹோமம் நமஸ்காரம் முதலியவைகளில் நான்குவிதமான முக்யவ்யூஹ மூர்த்திகளின் ஆராதனம் செய்யவேண்டும் என்பது ஏற்படுகிற படியினாலும், அந்தந்த மந்திரங்களில் இருக்கும் பதங்கள் நான்கு வ்யூஹமூர்த்தியைச் சொல்லுகின்றன என்று அந்தந்த சாஸ்திரங்களை யோசிக்கும்பொழுது ஏற்படுகிறபடியினால் ஏற்படுகிறது. ஆகையினால் அதை அனுஸரித்து இவ்விடத்திலும் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதை மந்திரத்துடன் ஸாப்பிடவேண்டுமென்பதே ஏற்பட்டது. ஸ்ரீமத் ராமாயணத்திலும் அந்த அடையாளங்களினால் ரஹஸ்யாம்நாயம் பஞ்சராத்திர சாஸ்திரம் இவைகளில் சொல்லப்பட்ட க்ரமமே ஞாபகப் படுத்தப்படுகிற படியினாலும், தனக்கு மூலப்ரமாணத்தை விரும்புகிற ஸ்ம்ருதிக்கு ஸம்பவிக்கிறதாயும் எல்லோராலும் அத்யயனம் செய்யப்படுகிறதாயும் இருக்கிற மூலவாக்யத்தை விட்டுவிட்டு வேறு

[illegible]

---

ஒரு மூலவாக்யத்தை ஊஹிப்பது யுக்தமல்லவா கையினாலும், ப்ராம்மணன் முதலிய எல்லோரும் பகவானை ஆராதனம் செய்யவேண்டும் என்பதும் பாஞ்சராத்ரத்தில் சொல்லப்பட்ட விதியை அங்கீகரித்துச் செய்யவேண்டுமென்பதும் 'ப்ராம்மணர்களினாலும் க்ஷத்திரியர்களினாலும் வைச்யர்களினாலும்' என்றாரம்பித்து மஹாபாரதத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருப்பதினாலே அதை ஒத்திருப்பதினாலும், உபரிசரர் முதலியவர்களினால் அப்படியே அனுஷ்டிக்கப்பட்டிருப்பதினாலும், இந்த ஸ்ரீமத்ராமாயணத்திலும் 'சாஸ்திரப்படி' என்பதினால் இதற்கு மூலமாகவேறு ஒரு விதி இருக்கிறதென்று சொல்லப்படுகிறபடியினாலும், இக்ஷ்வாகு முதலிய எல்லோரும் பௌஷ்கர ஸம்ஹிதையில் சொல்லப்பட்ட விதமாகவே பகவானை ஆராதித்தார்கள் என்பது பாஞ்சராத்திர சாஸ்திரத்தில் ப்ரஸித்தமாகையினாலும், 'பிறகு இந்த வரிசையினால் எல்லாவற்றிற்கும் ஈச்வரனாய் தாமரைப் புஷ்பம்போன்ற கண்களையுடைய ஸ்ரீராமன் மூன்று தம்பிகளுடன் கூடஇந்தஸ்ரீரங்கவிமானத்தைப் பெற்றுக்கொண்டார்,' என்றாரம்பித்து அவரும்இப்படியேபகவானைபௌஷ்கர ஸம்ஹிதையில் சொல்லப்பட்ட விதிப்படி ஆராதனம்' செய்தார்என்று பாரமேச்வரஸம்ஹிதையில் ஸ்வயம் வ்யக்தமான திவ்யதேசங்களை நிரூபிக்கும் இடத்தில் நிரூபிக்கப்பட்டிருப்பதினாலும், பாஞ்சராத்திரத்தில் சொல்லப்பட்ட விதமாகவே இந்த ஆராதனம் சொல்லப்படுகிறது என்று அறியப்படுகிறது. இப்படியாகையினால் ஸாப்பிடவேண்டிய தான பாகத்தைப்பற்றிய சேஷ என்னும் பதமும் அந்த பாஞ்சராத்திர சாஸ்திரத்தில் ப்ரஸித்தமான பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்ட அன்னத்தைப்பற்றியதே என்று நிச்சயிக்கப்படுகிறது. அப்படியே இவ்வி



[illegible]

---

டத்தில் 'பிறகு போக்யமான வஸ்துக்களை ஸம்பாதித்து ஸ்நானம்செய்துவிட்டு நன்றாக கால்களை அலம்பினவனால் நன்றாக ஆசமனம் செய்துவிட்டு' என்றாரம்பித்து 'அபிகமனத்தினால் பகவானை ஆராதனம்செய்யவேண்டும் என்று க்ரமத்தைச் சொல்லியிருக்கும் வசனத்தினால் மானஸ ஆராதனம் செய்வதுமுதல் ஆத்மஸமர்ப்பணம் வரையில் பகவதாராதனத்திற்கு முதலாவது அங்கம் அது அபிகமனம் என்று சொல்லப்பட்ட பெரிய அங்கம் என்று ஜயாக்ய ஸம்ஹிதையில் சொல்லப்பட்ட வசனத்தினால் ஏற்பட்டதான அபிகமனம் என்று பெயருடைய முதலாவது அங்கம் நாராயணனை அடைந்தார், என்பதினால் ஸூசிப்பிக்கப்பட்டது. 'ஹவிஸ்பாத்திரத்தை விதித்திருக்கிறபடி தலையினால் தூக்கிக்கொண்டு' என்பதினால் அன்னயஜ்ஞம் என்று பெயருடைய முக்யமான அங்கம் சொல்லப்பட்டது. ஹவிஸ்ஸைத் தலையினால் தாங்கிக்கொண்டுபோவது நிவேதனம் செய்வதற்காகவே. பிறகு அன்னத்தைமேல் நோக்கி வைக்கப்பட்ட உள்ளங்கையை உடையகைகளினால் தூக்கிக்கொண்டு தலையைவணக்கிக்கொண்டு மூச்சுவிடாமல் தனித்தனியான ஹவிஸ்ஸுக்களினால் பகவானை ஆராதனம் செய்யவேண்டும், என்று க்ரமம் சொல்லப்பட்டிருப்பதினால் அந்த ஹவிஸ்ஸுக்களை நிவேதனம் செய்வது இரண்டுவிதம். வணங்கி இருக்கிற தலையினால் தாங்கிக்கொண்டு போவது என்றிவை முதலாகப் பௌஷ்கர ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருப்பதினால், அந்தப் பகவானிடத்திலேயே செலுத்தப்பட்ட மனதை உடையவனாய் நல்ல மனதுடன்கூடினவனாய் அவஸரம் கோபம் முதலியவைகள் இல்லாதவனாயிருந்து எல்லா ஹவிஸ்ஸையும் தலையினால்

शिरसा धृत्वा हविरेव निवेदयेत्। [illegible] विवर्जितः" इति॥ विष्णुस्मृतेश्च। अनेन हविश्शब्देन होतव्याज्यपरिग्रह इति। अत्र कुदृष्टिदृष्टं निरस्तम्। होतव्यस्याज्यस्य शिरसा ग्रहणार्हसंस्कारश्रवणात्। अन्नस्य तथा श्रवणात्। "ज्वलति जुहोति" इति च होमस्याङ्गं श्रुतम्। अत्र काले विशेषः "प्राक् कुङ्कुमादिना लिप्तं [illegible] तं होमयेत्। स्रग्धूपं दीपकं चैव मधुपर्कं च वीन्याज्यं यथाक्रमम्॥" इति श्रीसात्वतवचनादिविधानसहस्रे सत्स्वपि केवलस्याज्यस्यैवादानं तत्प्राधान्यादिभिः।—"संस्कृताज्यस्य विप्रुड्भिः सर्वदोषादिशान्तये। [illegible]" इति हि तत्रोच्यते। पूर्णाहुतावाज्यमेव विनियुज्यते। यथा श्रीपौष्करे शयनाध्याये—"[illegible] पूर्णाहुतिं ततः" इत्यारभ्य "[illegible] पूर्णां स्रुचं ततः॥" इत्यादि। तथैव कुण्डलक्षणा

---

தாங்கிக்கொண்டு நிவேதனம் செய்யவேண்டும் என்று விஷ்ணு ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருப்பதினாலும் இத்தால் ஹவி: என்னும் பதத்தினால் அக்னியில் ஹோமம் செய்யப்பட வேண்டியநெய் சொல்லப்படுகிறது என்று குத்ருஷ்டியினால் அறியப்பட்ட அர்த்தம் நிராகரிக்கப்பட்டது. ஹோமம் செய்யப்படவேண்டிய நெய்க்குத் தலையில் தூக்கிக்கொண்டு வருவதாகிய ஸம்ஸ்காரம் சாஸ்திரத்தினால் சொல்லப்படாமையினாலும், அன்னத்திற்கு அப்படிப்பட்ட ஸம்ஸ்காரம் சொல்லப்படுகிறபடியினாலும். 'எரிந்துகொண்டிருக்கிற அக்னியில் ஹோமம் செய்தார்' என்று ஹோமம் என்கிற அங்கம்சொல்லப்பட்டது. இவ்விடத்தில் விறகுமுதலியவைகளில் 'முதலில் குங்குமம் முதலியவைகளினால் பூசப்பட்ட விறகு என்று பெயருடையவகளை ஹோமம் செய்யவேண்டும், மாலை, தூபம், மதுபர்க்கம், பொரிகள், நெய் இவைகளை க்ரமப்படி ஹோமம்செய்யவேண்டும்' என்று ஸ்ரீஸாத்வத சாஸ்திரத்தில் சொல்லிய வசனப்படி ஏற்பட்ட ஏழுவிதமான ஸமித்துக்கள் இருந்தபோதிலும் கேவலம் நெய்யை மாத்திரம் எடுத்தது அதுவே முக்யமானது என்பது முதலிய காரணங்களினால். ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட நெய்யின் துளிகளினால் எல்லாத் தோஷங்களும் சாந்தி அடைவதற்காக ஸமித் முதலியவைகளைத் தடவவேண்டும் என்றல்லவோ அவ்விடத்தில் சொல்லப்படுகிறது. பூர்ணாஹுதியிலும் நெய்யே உபயோகப்படுத்தப்படுகிறது. அப்படியே ஸ்ரீபௌஷ்கரஸம்ஹிதையில் சயனாத்யாயத்தில் 'பிறகு பூர்ணாஹுதியைச்செய்ய வேண்டும்' என்றாரம்பித்து புஷ்பம் முதலியவைகளினால் ஸ்ருவத்தை பூஜைசெய்து பிறகு நெய் நிறைந்த ஸ்ருக்கை [illegible] னை முதலாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

## சாச்வதபண்டுக்கு உபகரித்தவர்கள்,

| | | |
|---|---|---|
| ஸ்ரீ. உப. வே. ராஜகோபால அய்யங்கார், குளித்தலை. | ... | 1 0 0 |
| M. S. க்ருஷ்ண அய்யங்கார், சாத்தான்குளம். | ... | 1 0 0 |





## ரோஜா மொக்கு முத்துமாலைகள்.
### 26-திணுலைகள்.

இந்த முத்துக்கள் ஆச்சர்யப்படும்படியான ப்ரகாசமுடையவை. தலைகளை நிஜமானவும், போலிமுத்துக்களுடன் வைத்துப்பாருங்கள். நிஜமுத்தைவிட மட்டம் என்று தோன்றினாலும் போலிமுத்துக்களைக்காட்டிலும் உத்க்ருஷ்டம் என்று உங்களுக்குத் தோன்றாவிட்டாலும் வாங்கின 8-தினங்களுக்குள் மாலையை வாபஸ் செய்தால் கொடுக்கப்பட்ட பணம் திருப்பி அனுப்பப்படும். 18-அங்குல நீளமுள்ள தங்கமுகப்புடைய மாலை மிருதுவான பட்டால் மூடப்பட்ட அழகான சிறுபெட்டியுடன் ரூ 8-க்கு வி. பி. யில் அனுப்பப்படும். ஏமாறாமல் முன்னமேயே எழுதித் தருவித்துக்கொள்ளுங்கள். பலவித மோஸ்தர்களாய் 16-விதமான வர்ணத்தில் வாஸனையுடன் கூடினதாகச் செய்யப்பட்டிருக்கிறது.

## அப்பு என்ற அலூமினியம் சோப்பு.

ஐரோப்பாவில் ஒருபெரிய தொழிற்சாலையில் தயார் செய்யப்பட்டது. அலங்கோலமான அலூமினியம் பாத்ரங்களை உபயோகப்படுத்தி உங்களுடைய தேஹாரோக்யத்தை ஏன் பாழு பண்ணுகிறீர்கள். இந்த ஸோப்பை உபயோகித்துக் கழுவி சுத்திசெய்துகொள்ளுங்கள். இது சுத்திசெய்து மெருகு கொடுக்கும். 100-பாத்ரங்களை சுத்திசெய்ய ஒரே சோப் போதுமானது. உலகத்திலிருக்கும் ஹோஸ்டல்கள், போஜனசாலை ஹோட்டல்கள், ஆஸ்பத்திரிகளில் இது உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

சின்னப்பெட்டி 10-அணா, பெரியபெட்டி ரூ 1—4—0.

ஸ்வல்பமாய் வாங்கினால் வி. பி. யில் அனுப்பமுடியாது. அலூமினியம் சோப்புக்கு முன் பணமாகவே அட்டவேண்டும்.

International Buildings }
Ludhiana (Punjab) }

{ Distributors
{ Agencia Mercantil -y- Martin a.

## ச்ருதப்ரகாசிகா ஸஹிதம், ஸ்ரீபாஷ்யம் தமிழ்மொழி பெயர்ப்பு.

| | | |
|---|---|---|
| முதல் ஸஞ்சிகை (லகுஸித்தாந்தம் முடிய) | ரூ. ... | 1 4 0 |
| 2-வது மஹா பூர்வபக்ஷம் முடிய | ... | 0 10 0 |
| 3-வது ஜிஜ்ஞாஸாதிகரணம் | ... | 0 12 0 |
| ஸ்ரீ வசநபூஷண ப்ரமாணத்திரட்டு அரும்பத விளக்கம் | ... | 1 4 0 |
| திருவாய்மொழி ஈட்டின் ப்ரமாணத்திரட்டு முதல் 3-பத்து | ... | 0 12 0 |

திருப்புறம்பியம் போஸ்டு, }
கும்பகோணம். }

T. D. ராமஸ்வாமி நாயுடு

## ஸ்ரீ உ.ப. வே. ஸ்ரீசைல தாதாசார்யர் ஸ்வாமி.

நமது தேசத்தில் உபயவேதாந்தத்திலும் ப்ரவர்த்தகர்களாக் இருக்கும் ஸ்வாமிகள் மிகவும் சிலரே. அதில் ஒருவரும், காஞ்சீமண்டலத்துக்கு சிரோபூஷணமாக விளங்கிக் கொண்டிருந்த ஸ்ரீ. உ.ப. வே. ஸ்ரீசைலதாதாசார்யர் இந்த மாசியீ 3வ ஞாயிற்றுக்கிழமை ஸாயங்காலம் திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டார். இந்த ஸ்வாமிக்கு மிகவும் உன்னதபதமான ஸ்ரீபகவத் கைங்கர்யபதவி கிடைத்திருந்தபோதிலும் ப்ரக்ருதி மண்டலத்திலுழன்றுவரும் நாம் போலியர்களுக்கு இந்த ஸ்வாமியினுடைய தேஹவியோகத்தால் உண்டான துக்கம் இவ்வளவு என்றுசொல்லமுடியாது. காஞ்சீமண்டலமே சூன்யமாகிவிட்டது. மிகவும் ச்ரேஷ்டமான ஸ்ரீமந்நாதமுனிகள் வம்சத்தில் அவதரித்து, அநேகசிஷ்யஸம்பத்துடையவராக இருந்து, ஸதாசார பராயணராய், தர்மத்தில் ச்ரத்தாளுவாகவும், தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் வித்வானுகவும், மேதாவியாகவும், கவனசக்தியுள்ளவராகவும், கத்யரசனையில் அதிக பாண்டித்யமுள்ளவராகவும், நிரர்களமான உபந்யாஸம் செய்யும்சக்தியை உடையவராகவும், தர்மசாஸ்திர நிபந்தாவாகவும், அநேக பாஷைகளில் ஜ்ஞானமுள்ளவராகவும், அநேககலைகளில் ப்ரவீணராகவுமிருந்து ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துக்கு ஒரு பெரிய சிரோபூஷணம்போலிருந்தார். ஸ்ரீபாஷ்யாதி உத்க்ரந்தங்களில் எவ்விதம் ப்ரவேசமிருந்ததோ அதுபோல் தமிழ்பாஷையில் மிகவும் தேர்ச்சியை அடைந்து, அதில் கவனசக்தியை ஸம்பாதித்து, பகவத் விஷயத்தில் மிகவும் அநுபவத்துடன் கூடிய பாண்டியத்யத்தை வஹித்தார். ஸாதாரணமாய் ஸம்ஸ்க்ருதம் தெரிந்த பண்டிதர்கள் தமிழைத் வெஷிப்பது வழக்கம். அப்படிக்கில்லாமல் உபய வேதாந்த ப்ரவர்த்தகர் என்றும் பதத்தை ஸார்த்தகமாகச் செய்தவர். ரஸிகஜநாக்ரேஸரர். ஸஹ்ருதயாவுக்கும் நம்முடைய தீபிகைக்கும் விசேஷமாக விஷயப்ரதானம் செய்தருளி உபகரித்து வந்தார். இவருடைய வியோகத்தால் நமது ஸபைக்கும் நமது ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துக்கும் உண்டான நஷ்டம் இவ்வளவு என்று சொல்ல முடியாது. நம்முடைய ஹார்தமான அநுசோசனங்களை அவருடைய குடும்பத்தாருக்குத் தெரிவிக்கிறோம்.

## ஓர் விசேஷ தர்மம்.

திருவஹீந்திரபுரத்தில் ஸ்ரீ. உ.ப. வே. மணப்பாக்கம் வேதாந்த ராமாநுஜாசார்ய ஸ்வாமி ஸதாசார்ய கடாக்ஷம்பெற்று க்ரந்தங்களை யதாவத்தாக ஆசார்யனிடத்தில் அதிகரித்தும், ஸாமான்ய சாஸ்த்ரங்களை தர்மபுரி ஸ்ரீ. உ.ப. வே சடகோபாசார்யர் ஸ்வாமியினிடம் அதிகரித்தும் ஸதாசார நிஷ்டராயும், மிகவும் ச்ரைஷ்டத்துடன் ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகனிடம் மிகவும் பக்தியை உடையவராகவுமிருந்து சென்ற தைமீத்தில் திருநாட்டுக்கு எழுந்தருளினார். அந்த ஸமயத்தில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனுக்கு விசேஷமாகம் கைங்கர்ய செய்தார் என்பதைமாத்திரம் இவ்விடம் குறிப்பிட முன்வந்தோம். ஏற்கனவே அவர் செய்துவந்த ஸ்ரீதேசிகன் திருத்தேர் உத்ஸவத்தில் சாத்துமுறை காலத்தில் மிகுந்த ச்ரத்தையுடன் அமுது செய்வித்து கோஷ்டி விநியோகம் செய்துவந்த ப்ரகாரம் எக்காலத்திலும் நடப்பதற்காக மூலதனமாய் ஸுமார் ரூ. 700-யும், ஸ்ரீதேசிகன் ஸ்ரீமத்திருநக்ஷத்ரங்களில் சந்தனம் புஷ்பம் முதலிய கோஷ்டி விநியோகம் செய்ய போதுமான மூலதனமாக, தமக்கு கைங்கர்யம் செய்தவருக்கும் தம்முடைய பார்வைக்கும் கொஞ்சம் தனத்தை ஜீவனார்த்தமாக வைத்துவிட்டு, ஸுமார் ரூ. 2000 பொருமான மீதஸொத்தை ஷெ கைங்கர்யத்து ஸமர்ப்பித்துவிட்டார். இவ்வளவு ஸ்ரீதேசிகன் கைங்கர்யத்தில் ச்ரத்தை உடையவராய் ஸ்வாமி வ்யயம்செய்தது மற்ற ஆஸ்திகர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது என்பதை நாம் இங்கு குறிப்பிடுகிறோம்.